289

மிராசுதார்

ர்:-ஏண்டி பட்டு! குழந்தை ரெண்டு நாழியா அழறதே;
உங்கம்மா எங்கே தொலேஞ்சு போயிட்டா?

குழந்தை அழல்லே அப்பா. அது அப்பவே தூங்கிப் போயிடுத்து. அம்மான்னு பாடிண்டிருக்கா!

சுபானு மாசி :: விலே அணு 4

JL
ஈ211, N35NR.
N44
176489

"மிராசுதார்"

(இனிய தமிழ் மாதப் பத்திரிகை)

தமிழ் மாதம் முதல்தேதி தோறும் வெளிவருவது
உயர்தர கட்டுரைகள், ரஸமான சிறு கதைகள், சினிமா, ரேடியோ விமர்சனங்கள் முதலியவைகளோடு அழகிய ஓவியங்கள், புகைப்படங்கள் மற்றும் பல சிறந்த விஷயங்கள் நிறைந்தது.

எல். ஆர். வி.

எழுதிய

சாந்தியின் எல்லை

தொடர்ச்சியாக வெளியாகிறது.

இன்றே சந்தாதாரராய் சேருங்கள்.

வருஷசந்தா ரூ. 3. தனிப்பிரதி அணா 4.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்

T. B. சீதாராம், பல் டாக்டர்,

பெரியதெரு, கும்பகோணம்.

சற்று கவனியுங்கள்

நாடெங்கும் உலவும் தமிழ்ப் பத்திரிகை

"மிராசுதார்"

உங்களுடைய வியாபாரத்தை அபிவிருத்தி செய்ய உங்களைப்பற்றி எல்லா இடங்களிலும் அறிமுகப்படுத்த உங்கள் பத்திரிகையான மிராசுதாரில்

விளம்பரம் செய்யுங்கள்

தாற்காலிகமாகக் குறைந்த விகிதம்

அட்டைப் பக்கங்கள்		சாதாரண பக்கங்கள்	
முழுப் பக்கம்	30—0—0	முழுப் பக்கம்	20—0—0
அரைப் பக்கம்	15—0—0	அரைப் பக்கம்	10—0—0
கால் பக்கம்	8—0—0	கால் பக்கம்	5—0—0

விவரங்களுக்கு:— மானேஜர், மிராசுதார் காரியாலயம், மாயவரம்.

V V

நமது ஒரிஜினல்

பிரசித்தி பெற்ற ரிஜிஸ்டர்ட் 25723

தென்னமரக்குடி எண்ணெய்

(மேலுக்கும்)

தேவகல்ப தென்னமரக்குடி சூரணம்

(உள்ளுக்கும்)

உபயோகிக்க குழந்தைகளின் மாந்தம், வயிற்றுக்கட்டி, கக்குவான், கணை இழுப்பு ஆண் பெண்களின் வெட்டை, மலச்சிக்கல், வயிற்றுவலி, தலை, கண், பல்வலி, காலரா, வாந்தி, சீதபேதி, ரத்தபேதி, மூலம், அன்னத்துவேஷம், தாது க்ஷீணம், பிளேக் கட்டி, உள்புரைநோய் முதலிய சகல நோய்களுக்கும், பாம்பு, தேள், நாய், எலிக்கடி, முதலிய சகலவிஷங்களுக்கும் நிகரற்ற குணமளிக்கும். தற்புகழ்ச்சியல்ல. உத்தரவாதமுள்ளது.

தேவகல்பம் பாட்டில் **1–4–0** தென்னமரக்குடி எண்ணெய் டின் **0–10–0**

எல்லா ஊர் மருந்து, மளிகை ஷாப்புகளிலும் கிடைக்கும்.

Sole Manufacturer:– Dr. R. S. கிருஷ்ணா, மாயவரம்.

கேரளா "வெப் ஸோப்"

மருந்து குணத்தோடு தேகப் பராமரிப்புக்கும் ஏற்றது.

பொருக்கி எடுத்த சரக்குகளால் தயாரிக்கப்பட்டது.

வேப்பெண்ணெயின் சக்தியுள்ள அம்சங்களைக் கொண்டது.

சருமத்தைப் போஷிக்கும் ஒரு பிரபலமான ஔஷதம்

தயாரிப்பவர்கள்:—

கேரளா ஸோப் இன்ஸ்டிடியூட், கள்ளிக்கோட்டை.

நறுமணம் கமழும் திருமண வைபவம்

"கலைப்பித்தன்" என்ற புனைப்பெயரோடு பத்திரிகைகளுக்குக் கதை, கட்டுரைகள் எழுதிவரும் அ. சுந்தரராஜன் அவர்களின் சகோதரியும், அரிமளம் டாக்டர் ஜி. பி. அருளப்பரின் செல்வப் புதல்வியுமான நிறைநாட்செல்வி **மேரியசோதை அம்மாளுக்கும்**, தஞ்சைமாநகர் திருவாளர் பி. ஜே. சார்ல்ஸ்பீ அவர்களின் குமாரர் நிறைநாட்செல்வன் **சுவார்ச்மார்டின்** அவர்களுக்கும் புதுக்கோட்டையில் சுபானு ஆண்டு தைமதி 22-ம் நாள் காலை 10-மணிக்கு சீயோன் ஜுப்பிலி தேவாலயத்தில் திருமணம் இனிதே நிறைவேறியது. அதன்பின்னர் தெற்கு நாலாம் வீதியிலுள்ள 5536ம் நெ. கட்டிடத்தில் கண்கவர் வனப்புடன் அமைக்கப்பட்ட பூப்பந்தலில் மணமக்களுக்கு வாழ்த்துப் பாக்களும், நல்லாசிகளும் கூறப்பட்டன. செட்டிமார் நாட்டிலுள்ள பல, பிரமுகர்களும் தமிழ்ச் செல்வர்களும், செல்விகளும் திரள் திரளாகத் திருமணத்திற்கு விஜயம் செய்தது குறிப்பிடத் தக்கது. வைபவத்திற்கு வரஇயலாத வெளியூர் நண்பர்களிடமிருந்து ஏராளமான வாழ்த்துச் செய்திகளும், பரிசுகளும் வந்து குவிந்த வண்ணமாகவே இருந்தன. கண்காட்சிச் சாலையோவென நினைக்கும் வண்ணமிருந்தது, பரிசுகளைப் பார்த்தபோது. "புதுக்கோட்டையில் கிறிஸ்தவ சமூகத்தில் நடந்தேறிய திருமணங்களுள் இதுவும் சிறந்தது" என்று பிரமுகர்கள் கூறினர்கள். மணமக்கள் நீடுழி வாழ்க. A. T.

எழுதி அநுப்புங்கள்

கிராமச் சீர்திருத்தங்கள், விவசாயம், கால்நடைகளின் பராமரிப்பு, முதலிய விஷயங்களையும், நாட்டில் உலவும் பண்டையப் பாடல்களையும் சேகரித்து அநுப்புங்கள். சந்தோஷத்துடன் வரவேற்கிறோம்.

மாலை 10. | FEBRUARY, 1944. | முத்து 2.

பொருளடக்கம்

விஷயம்		எழுதியவர்	பக்கம்
சமாளிக்க வழி என்ன?	....	—"விவசாயி"	5
என்னவேண்டும்?	....	சுவாமி சரவணபவானந்தா	7
ஹரிச்சந்திரா	....	"கீரன்"	8
அபராதி	....	கமலாபத்மநாபன்	16
மாயவாத்தியக்காரன்	....	ஏ. எப். முகம்மது மைதீன்	25
வீடு வேட்டை	....	டி. வி. சுவாமிநாதன்	29
ஒன்று ஒன்பதாகுமோ?	....	வெ. சு. அருணன்	32
விநோத அரசியல்	....	அ. சீனிவாசன்	34
சங்கீதம்	....	பி. வி. கணேசய்யர்	37
முதலுக்கே மோசம் (படம்)	....	"ஜாலி"	40
வைத்தியம்	....	டி.எம். நாராயணஸ்வாமி அய்யர்	41
நகைச்சோலை	....	....	46
பாலர் மலர்	....	ராமன்	47
சாந்தியின் எல்லை (தொடர்கதை)		எல். ஆர். வி.	...

மிராசுதாரில் வெளியாகும் கதை கட்டுரைகளிலுள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனைகளே. யாரையும் குறிப்பிடுவனவல்ல.

சென்ற மாதத்தில் பரிசுபெற்றவர்கள்

1. எதிர்பாராதது (சிறு கதை)
A. அப்துல் கரீம் C/o காதர் பாஷா ஸாகிப், 1649, தெற்குத் தெரு, தஞ்சாவூர்.

2. அப்பா சொற்படி (ஹாஸ்யத் துணுக்கு)
R. வெங்கட்டராமன், (விலாசம் தெரிவிக்கவும்)

3. அபிப்பிராயம் (சிறுகதைக்கு)
M. விசுவனுதன், 151, பட்டமங்கலத்தெரு, மாயவரம்.

4. அபிப்பிராயம் (துணுக்குக்கு)
V. ராமு. முதலாவது பாரம், வி. பிரிவு, போர்டுஹைஸ்கூல், குத்தாலம், தஞ்சை ஜில்லா.

═══(இங்கே கத்தரிக்க)═══

அபிப்பிராயம்

சிறு கதைகள்.

(1) அபராதி ...
(2) மாயவாத்தியக்காரன் ...
(3) வீடு வேட்டை ...
(4) வினேத அரசியல் ...

நகைச்சோலை.

(1) பெப்பே ! ...
(2) திடவைராக்கியம் ...
(3) நல்ல பதில் ...
(4) இல்லாத வருத்தம் ...
(5) காரணம் ...
(6) நானும் செவிடா ? ...

விடுகதையில் பரிசு பெற்றவர்கள்

சென்ற இதழில் வெளியான விடு கதைக்கு அதை எழுதிய இலங்கை ந. பிச்சமூர்த்தி கொடுத்துள்ள சரியான விடை:—

அம்பு

76 பேர்கள் சரியானவிடை அனுப்பியிருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் 15–2–44ல் பரிசு அனுப்பப் பட்டது. இடம் இல்லாததால் அவர்கள் பெயர்களைப் பிரசுரிக்க இயலவில்லை.

பெயர்...

விலாசம்...

176459.

சமாளிக்க வழி என்ன?

பசிவேளையில்தான் உணவைப்பற்றின சிந்தனை யேற்படு கிறது. அதேபோல் பஞ்சமான காலத்தில்தான் உணவுப் பொருள்கள், உடை முதலியவைகளை சேகரிப்பதில் அதிக கருத்துச் செலுத்தப்படு கிறது. நாட்டில் பஞ்சம் அதிகரிக்க அதிகரிக்க ஜனங்களினிடையே ஒரு வித பரபரப்பு ஏற்படுகிறது. "நிலைமையை சமாளிக்க வழி யென்ன?" என்பதே அந்த பரபரப்பின் முக்கிய லட்சியம். இரவு பகல் இதைப்பற்றி சிந்திக்கப்படுகிறது. காரஸாரமாகப் பேசப்படுகிறது. ஆனால் செய் முறையில் ஒன்றுமில்லை. "விவசாயத்தைப் பெருக்க வேண்டும், கைத்தொழில்களை ஆதரிக்க வேண்டும், ஆரம்பக் கல்வி முதலிய கிராம வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்களை அபி விருத்தி செய்யவேண்டும்." என்றெல்லாம் வாய் ஓயாது உருப் போடுகிறோமே தவிர ஒன்றும் நடைபெற வில்லை.

"காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்பதுபோல் வாழ்க் கைக்கு வேண்டிய—அவசியமான—நிரந்தரமான வசதிகளை வகுத்து நல்ல திட்டங்களைப்போட்டுக்கொண்டு தக்க முறையில் பாடு பட இன்றைய யுத்த நிலை—பஞ்சத்தினலேற்பட்ட பரபரப்பு ஒரு சிறந்த தூண்டுகோலாகயிருக்கிறது. எல்லையை மீறி சோம்பல் ஆட் கொண்டு விட்ட ஜன சமூகத்தில் உழைப்பின் அவசியமும் அதன் பயனும் ஏற்படுவதற்கு இதை விட ஒரு சந்தர்ப்பமும் கிடையாது. உழைப்பின் அவசியத்தை ஒருவாறு ஜன சமூகம் உணர்ந்து வரு கிறது. தான்ய வகைகள், விறகு, உடை, கால்நடை முதலியவைகளை அபிவிருத்தி செய்வதில் ஊக்கம் காட்ட வேண்டும் என்று ஜனங்கள் எண்ணுகிறார்கள். சிலர் பிரயாசித்து வருவதாகவும் தெரிகிறது. வெறும் எண்ணம் மட்டும் போதுமா? சிலர் முயற்சித்தால்தான் போதுமா? எண்ணத்திலும் முயற்சியிலும் எல்லோரும் ஈடுபடவேண்டும். அது நீடிக்க வேண்டும். வெற்றி கிட்டுவது நிச்சயம். ஒன்றுக்கு நாலு விலை கொடுத்து முழுத்துண்டும், சிறு விறகு துச்சியும் மற்றும் ஏனைய சாமான் களும் கடையிலிருந்து மிகுந்த பிரயாசையின் பேரில் வாங்குகிற அந்த க்ஷணத்தில் மட்டும் வெறு விறுப்பும், ஆக்ரோஷமும் கொள்ளுவதில் பயனில்லை.

பரந்த விளைபூமியைச் சார்ந்து வாழ்ந்து வருகிற கிராமவாசிகளின் கையில்தான் இருக்கிறது இன்றைய பஞ்ச நிவாரண நிதியின் திறவுகோல். அவர்களின் முயற்சியால்தான் இன்றைய துர்ப்பிட்சம் தீர்ந்து நாடு சுபிட்சம் பெற வேண்டும். ஆனால் 'வெறும் கை முழம் போடாது' என்று சொல்வது போல விவசாயிகள் விஷயத்தில் அவர்களுக்கு வேண்டிய முக்கிய சாதனங்களை தாராளமாக அளித்து பூர்ண சலுகை காட்டப் படவேண்டும். தீபம் சுடர் விட்டுப்ரகாசிக்க வேண்டுமானால் எண்ணெயும், திரியும் இருந்தால் மட்டும் போதாது. ஆர்வத்துடன் அதை ஏற்றி வைத்து தூண்டி விடவும் வேண்டும். அப்போதுதான் தீபம் ப்ரகாசிக்கும்! இருள் நீங்கும்!! பஞ்சப்பேய் ஓடி ஒளியும்!!! மனித வாழ்க்கை சந்தோஷகரமானதாக ஆகும். விவசாயிகள் விஷயத்தில் சர்க்கார் பூர்ண ஆதரவு அளிப்பார்களா?

—"விவசாயி"

T. K. சங்கரவடிவேலு பிள்ளை, B. A., கிரெயின் பர்ச்செஸிங் ஆபீஸர் அவர்களிடமிருந்து தஞ்சை ஜில்லா டெல்டா மிராசுதார் நிலச்சுவான்தார் சங்கத்தின் காரியதரிசி அவர்களுக்கு கிடைத்திருக்கும் கடிதம்.

ஐயா,

Sub:— Civil supplies — paddy purchase rates.
Ref :— Your letter dated 29—12—43

புதியதாக அறுவடையாகும் நெல் வகைகளுக்கு கீழ்க்கண்ட விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

1. முதல் ரகம் சிறுமணி, கோத்தமல்லிசம்பா.

	ரெயில்வே மாண்டுவிலை.
சாக்கு இல்லாமல் கிராமத்திலேயே டெலிவரிக்கு	ரூ 4—13—8.
மில் டெலிவரி	ரூ 4—15—4.
புதுச் சாக்கோடு ரெயில்வே ஸ்டேஷன் டெலிவரி	ரூ 5—10—9.

2. இரண்டாவது ரகம் கட்டசம்பா, நெல்லூர் சம்பா.

சாக்கு இல்லாமல் கிராமத்திலே டெலிவரிக்கு	ரூ 4—11—0.
மில் டெலிவரி	ரூ 4—12—8.
புதுச் சாக்கோடு ரெயில்வே ஸ்டேஷன் டெலிவரி	ரூ 5—7—9.

குறிப்பு:— இந்த விலைகள் முதல் ரக நெல்லுக்கும், எந்த ரெயில்வே ஸ்டேஷனுக்காவது மில்லுக்காவது 4 மைல்களுக்கு உட்பட்ட கிராமங்களுக்கும் செல்லுபடியாகும். நெல் தரத்தில் குறைவானதற்கும், ரெயில்வே ஸ்டேஷன்களிலிருந்தும், மில்களிலிருந்தும் 4 மைல்களுக்கு அப்பால் உள்ள கிராமங்களுக்கும் விலைகளில் உசிதமான தள்ளுபடி செய்யப்படும்.

தஞ்சாவூர்,
14-1-44.

T. K. சங்கரவடிவேலு,
கிரெயின் பர்ச்சேஸிங் ஆபீஸர்.

என்ன வேண்டும்?

வீரத் தமிழ்பாட வேண்டும் - எங்கும்
வெற்றிக் கொடி நாட்ட வேண்டும்
சோரத் தனம் நீங்க வேண்டும் - அருட்
ஜோதி யெனச் சொல்ல வேண்டும்

கம்பன் புகழ் பாட வேண்டும் - கவி
காள முகி லாக வேண்டும்
செம்பொன் நிதி தேட வேண்டும் - கல்விச்
செல்வம் மிக ஓங்க வேண்டும்

பாட்டிப் பதம் பாட வேண்டும் - தவ
பாரதி யைப் போற்ற வேண்டும்
நாட்டில் பொது சேவை வேண்டும் - நம்மை
நாக ரிகம் செய்ய வேண்டும்

தெய்வ நினைப் பொன்று வேண்டும் - தன்னுள்
ஜீவ நிலை காண வேண்டும்.
சைவப் பெருநோக்கம் வேண்டும் - திரு
சரவணத் துணைச்சார வேண்டும். (வீ

—சுவாமி சரவணபவானந்தா

அடுத்த இதழில்

கி. வா. ஜ.

*

காண்பதும் கேட்பதும்

"கீரன்"

ஹரிச்சந்திரா

[சென்னை ஜெமினி ஸ்டுடியோவில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிக்சர்ஸ் தயாரிப்பு. டைரக்ஷன்: கே. நாகபூஷணம். வசனம் டி. வி. வடிவேல் நாயகர். பாடல்கள்: வி. ஏ. லக்ஷ்மணதாஸ். நடிகர்கள்: பி. யு. சின்னப்பா, பி. கண்ணாம்பா, ஆர். பாலசுப்ரமண்யம், மாஸ்டர் சேதுராமன், எல். நாராயண ராவ், எம். ஆர். சுவாமிநாதன், என்.எஸ். கிருஷ்ணன், டி.ஏ. மதுரம், முதலியோர்]

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்கிற மூதுரை பொய்த்துவிடுமோ என்ற சந்தேகம் சிலதினங்களுக்குமுன் ஏற்பட்டது. எவ்வளவு பிரயாசித்தும் வெகுநேரம் வரையில் டிக்கட் கிடைக்கவில்லை. ஸன் தியேட்டரில் அன்று அத்தனை கூட்டம்! நேரமோ போய்க் கொண்டிருந்தது. ஜனங்களில் சாமர்த்தியம் நிறைந்த சிலர் டிக்கட் பெற்று கொட்டகைக்குள் சென்று கொண்டிருப்பதைக் காணக்காண பக்கத்தில் நின்றுகொண்டிருந்த என் நண்பர் பதைபதைத்தார். "என்ன ஐயா! சீக்கிரம் டிக்கட்டை வாங்குமே! எல்லாரும் போகிறார்களே, தெரியவில்லை?" என்று என்னை உலுப்பினர். அவருக்கென்ன? எட்ட நின்று பேசுகிறார். ஜன்னலின் கிட்டவந்து பார்த்தாலல்லவா தெரியும்?

கொட்டகைக்குள் பாட்டுச் சத்தம் கேட்டது. படம் ஆரம்பமாகிவிட்டதோ என்ற கவலை! என்ன கவலைப்பட்டு என்ன? கூட்டமெல்லாம் போன பின் தான் டிக்கட் கிடைத்தது. ஆத்திரத்துடன் நின்ற நண்பரைச் சமாதானம் செய்து கொட்டகைக்குள் அழைத்துச் சென்றேன். படம் ஓடிக்கொண்டிருந்தது. நல்லவேளையாக அது "நமது சிற்பச் செல்வங்கள்" என்கிற துண்டுப்படம். எங்கள் மனம் நிம்மதியடைந்தது. ஓரிடத்தில் சென்றமர்ந்து ஏககாலத்தில் இருவரும் நெடுமூச்செறிந்து சிரமப்பரிகாரம் செய்துகொண்டோம்.

ஹரிச்சந்திரா படம் நன்றாயிருக்க வேண்டுமே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த எங்களை முதலிலேயே திருப்தி செய்து வைத்தது மேற்கூறிய

துண்டுப்படம். நமது நாட்டின் பண்டைய பெருமைகளை யெல்லாம் நன்கு விளக்கிக்காட்டும் அதைப் பார்க்கும்போது மனதில் அளவு கடந்த ஆனந்தமும் பெருமையும் ஏற்பட்டது. "சரி; ஹரிச்சந்திரா நன்ருயில்லாவிட்டால்கூடப் பரவாயில்லை. கொடுத்த காசு இதற்கே செரிக்கும்" என்ற முடிவுக்கு நாங்கள் வரும் சமயம் ஹரிச்சந்திராவும் ஆரம்பமாயிற்று.

முதன் முதலில் லோகிதாசனுக்குச் சேடிகளும், தாயுமாகக் கூடி ஆடையாபரண அலங்காரா திகளையணிவித்து மங்கள ஹாரத்தி யெடுத்துக் கொலு மண்டபத்திற்கு அழைத்துச் செல்லும் காட்சியைக் கண்டதுமே "சபாஷ்! ஆரம்பமே ரொம்ப ஜோர்!" என்றேன் நான். அது பொறுக்கவில்லை நண்பருக்கு. "அவசரப் படேல்!" என்று கர்ஜித்தார். வாயை மூடிக்கொண்டேன். அடுத்தபடியாக ஹரிச்சந்திரன் பரம சாந்த சொரூபனுய்க் காட்சியளித்தான். கொலு மண்டபம், ராஜரீகம் என்பன போன்ற வீண் வளர்த்தல்கள் இல்லை. தடதடவென்று விசுவாமித்திரர் வந்தார். யாகத்திற்குப் பொன் கேட்டார். வாக்குறுதியை வாங்கிக்கொண்டு போய்ச் சேர்ந்தார். "நல்ல வேளையாக எடுத்த எடுப்பிலேயே மயான காண்டமாக இல்லாமல் போயிற்றே!" என்று முணுமுணுத்தார் நண்பர். ஆனலதற்குள் ஹரிச்சந்திரன் சம்பந்தமாக தேவ சபையில் விசுவாமித்திரருக்கும் வசிஷ்டருக்கும் நடந்த விவாதம் விசுவாமித்திரரின் அகக்கண் முன் தோற்றுவதாகக் காட்டப்பெறவே "போகிறது." என்று கூறி மனதைச் சமாதானம் செய்து கொண்டார். மேற்கொண்டு கதை தொடர்ச்சியாகக் காட்டப்பட்டது.

விசுவாமித்திரரின் விலங்கின உற்பத்தி, ஹரிச்சந்திரன் வேட்டை, பாணப் பெண்களின் நடனம், ராஜ்யாபஹாரம், காசியாத்திரை, அடிமைப் படலம், மயானகாண்டம் எல்லாம் விறுவிறுவென்று நடைபெற்றன.

ஒருவாறு படம் முடிந்தது. மீண்டும் இருவரும் பெருமூச்செறிந்தோம். லைட்டு போடப்பட்டது. நண்பரும் நானும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டோம். நண்பர் முகத்தில் அசடு வழிந்தது எனக்குத் தெரிந்தது. ஆனல் என் முகம் எப்படியிருந்ததென்று அப்பொழுது அவரைக் கேட்கப் பயமாயிருந்தது. மௌனமாகக் கொட்டகையினின்று வெளியேறினேம். ரிக்ஷா, ஜட்கா ஒன்றும் கிடைக்கவில்லை. நாங்கள் அதையெல்லாம் எதிர்பார்த்துத் தயங்கி நிற்கவுமில்லை. மயிலையை நோக்கி மெள்ள நடக்க ஆரம்பித்தோம். ஒரு முறை இரண்டு முறையென்று கனைத்துப் பார்த்தேன் அவருடன் சம்பாஷிக்க. நெஞ்சினின்றும் வார்த்தைகள்

வெளிவரவில்லை. நண்பரின் தோற்றத்தையும், மௌனத்தையும் கண்டு அத்தனை பயம்! அப்படி நான் பயப்படுவதற்குத்தக்க காரணமுமிருந்தது.

ஒருவாரகாலமாக நானவரை வற்புறுத்தி வந்தேன் இந்தப் படத்தைப் பார்க்க. அவர் இணங்கவேயில்லை. "என்ன ஐயா வேண்டியிருக்கு ஹரிச்சந்திரா? அந்த தீர புருஷன் நடித்த பாகத்தை இன்னொருவர் நடிப்பதாவது? ஹரிச்சந்திரனாக நடிப்பதற்காகவே பிறந்தவர் அவர். மற்ற படங்களில் எப்படியானாலும் ஹரிச்சந்திராவில் பூரண வெற்றி அவருக்கு. அந்தப் படத்தைப் பார்த்த கண்களால்—" என்று ஆட்சேபித்துக் கொண்டேயிருந்தார். முடிவில் என் பிடிவாதத்திற் கிணங்கி ஏதோ வந்தார். பார்த்தார். முகத் தோற்றம் திருப்திகரமாக இல்லை. நான் பயப்படாமல் என்ன செய்வது? ருத்ரபூமியிலிருந்து திரும்பும் பாவனையில் மௌனமாக அவரைப் பின் தொடர்ந்து சென்றேன். அந்த பயங்கரமௌனத்தை அவரே கலைத்தார். "யார் போய் சொல்லுவார்—" என்று பாட ஆரம்பித்தார். பிறகு என் பரிதாப நிலையைக் கண்டு மனமிரங்கித் தானே என்னவோ பேச ஆரம்பித்தார்.

"ஏனையா, ஒருவாரமாக இதற்குத் தானே உபத்ரவம் செய்தீர்? பார்த்தாச்சா **ஹரிச்சந்திரா?**" என்று குத்தலாகக் கேட்டார்.

நானும் சளைக்கவில்லை. துணிச்சலாகவே பேசினேன்.

"ஏன்? படத்திற்கென்ன?"

"போதுமே பரிவு! படத்திற்கு என்னவாம்!.... இது ஹரிச்சந்திரன் கதை என்று யாரையா உமக்குச் சொன்னது?"

"அடாடா! இதென்ன இப்படிப் பேசுகிறீர்? முதலுக்கே மோசமா?"

"பின்னென்ன? புராணப் படங்களை யெடுப்பதாயிருந்தால் ஒழுங்காக எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ஏதாவது நவீனக் கதைகளில் புகுந்து விளையாட வேண்டும். நவீனமென்றால் மனம் போனபடி யெல்லாம் அமைக்கலாம். யாரும் குற்றம் சொல்வதற்கு இடமிராது. புராணப் படங்களிலோ, உள்ளதை ஒளிக்கவோ, இல்லாததைப் புகுத்தவோ கூடாது. தவிர ஹரிச்சந்திரா, நல்லதங்காள் போன்ற கதைகள் வெகு நாட்களுக்கு முன்னாலிருந்து நாளை வரையில் நம் நாட்டில் நாடக ரூபத்தில் நடைபெற்று வருகின்றன. ஜனங்கள் மனதில் அந்தக் கதைகள் ஒரு உருவம் பெற்றுவிட்டதற்கு மாறுதலிருந்தால். எப்படி சகிக்க முடியும்? செல்லப்பா, ராஜலக்ஷ்மி நடித்த படம் அப்பழுக்கற்றது. கதை, பாட்டு, மெட்டு, வசனம் யாவும் மக்கள் மனதைக் கொள்ளை கொண்டு விட்டன.

வருஷங்கள் பலவாகியும் மனதை விட்டு மறையவில்லை அப்படம். அவ்வாறிருக்கும்போது அந்த அம்சங்களில் ஒருசிறிதுமில்லாத இந்தப் படத்தைப் பார்க்க மனம் எப்படி இடங்கொடுக்கும்? இதை இந்தப் படத்தின் சிருஷ்டி கர்த்தாக்கள் உணராதது மிகவும் ஆச்சரியம். ஹரிச்சந்திரா மட்டுமென்ன? பழைய — ஏற்கனவே வெளியான படத்தை மறுபடியும் எடுத்து யாரும் வெற்றிபெற்றதாகத் தெரியவில்லை. நினைப்புத்தான், 'ஏதோ அபாரமாகச் சாதித்துவிடுகிறோம்.' என்று. முடிவில் எல்லாம் விருதா."

" இந்தப்படத்தில் அப்படி எந்த இடம் கதையில் தவறாக இருக்கிறது? "

"ஹரிச்சந்திராவில் பிராதானமான கட்டம் மயானகாண்டம். அது எப்படிச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது? அடிமையான ஹரிச்சந்திரனின் நடையுடை, பாட்டு, பேச்சு, முதலியனவும், சந்திரமதியின் வருகை, பிணம் சுட எத்தனித்தல் ,சதிபதிகளின் சந்திப்பு இவைகளெல்லாம் எப்படியிருக்கின்றன? அது மட்டுமா? இன்னும் எத்தனையோ? காலகண்டன் தம்பதிகள் செய்யும் லீலைகள் எத்தனை ஆபாஸமானது? பல பல சொல்வானேன்! கதையின் அமைப்பு நன்றாயில்லை. நல்லதாக இரண்டு பாட்டாவது உண்டா?"

" என் இல்லை? அதுதான் பத்துப் பன்னிரண்டு பாட்டுகள் இருக்கின்றனவே!"

" நீர்தான் சிலாகித்துக் கொள்ளவேண்டும் அந்தப் பாட்டுக்களை !"

"நீர் செல்லப்பாவையே தியானம் செய்துகொண்டு படம் பார்த்தால் அதற்கு யார் ஜவாப்தாரி? அந்த ஒப்பாரி மெட்டெல்லாம் இந்தக் காலத்திற்கு ஏற்குமா ?"

" ஸ்மசானகாண்டத்தை முக்கிய ஸ்தானமாகக் கொண்ட கதை இந்தக் காலத்திற்கு ஏற்றுக்கொள்ளும், அந்த மெட்டுகள்தான் ஏற்காதோ? இந்த மெட்டுக்கள் மாத்திரம் என்ன அழகு வழிகிறது? அது கர்நாடக ஒப்பாரி இது நவீன ஒப்பாரி. அந்தக் கர்னாடக மெட்டுக்கள்தான் ஸ்வாமி இந்த மாதிரி படங்களுக்குஏற்றவை. அடாடா! அந்த செல்லப்பா முழத் துண்டை இடையில் தரித்து, கோலைக் கையில் பிடித்து அந்த ருத்ரபூமியில் 'நின்று பிறந்தது மண் மேல்'

என்ற பைரவி விருத்தத்தையும் 'ஆதியிலும் பறையனல்ல' 'யார் போய்ச் சொல்லுவார்' என்ற பாடல்களையும் பாடும்போது......
.....உம்! சந்திரமதியும், ஹரிச் சந்திரனும் செய்யும் தர்க்கம், அந்தப் பாட்டுக்கள் அனைத்தும் உணர்ச்சியின் உச்ச ஸ்தானத்தி லல்லவோ இருந்தன! ஆனால் அந்த செல்லப்பாவுக்குப் பட உலகம் எத்தகைய மரியாதை யை அளித்து வருகிறது? அவர் இதுவரையில் நடித்திருக்கும் படங்கள் அனந்தம். ஒன்றிலா வது அவருக்கு சலுகை காண் பிக்கப்படவேயில்லை. அதனால் தமிழ் மக்களின் இருதய பூர்வ மான அன்பு குறைந்துவிடுமா? இன்று கிட்டப்பாவை ஓரளவு நினைவுகூர உதவி புரிந்துவருப வர் செல்லப்பா. அவருக்கு நாடகம், சினிமா முதலிய துறைகளில் முக்கிய ஸ்தானம் கொடுக்கப்படவேண்டிய அவ சியத்தை உணராதது தமிழ் நாட்டின் குற்றமே. இந்த

சின்னப்பா என்ன செய்கிறார்? கண்ணாம்பாள்தான் என்னசெய் கிறார்? பாட்டு விஷயம் பெரிய பூஜ்யம். வசனங்களிலாவது அநுபவிக்கத் தக்க பாவமோ, கோர்வையோ இருக்கின்றன வா? இந்தப்படத்தில் வசனங் கள் உப்புச்சப்பில்லாமலிருக் கின்றன."

"சரி. கதை, பாட்டு, வசனம் மூன்றுக்கும்தான் இப்படிச் சொல்கிறீர்கள். நடிப்பு?"

"என்னத்தைச் சொல்வது? "பாத்திர மறிந்து பிச்சையிடு" என்பதுபோல் நடிகர்களின் தன் மையையறிந்து வேஷம் கொடுக் காததும் சிருஷ்டிகர்த்தாக்களின் குற்றம்தான். இந்த ஜோடிகள்-சின்னப்பா, கண்ணாம்பா இரு வரும் வீரத் தன்மை நிறைந்த சரித்திரப் படங்களிலும், ஸ்டண்ட் சமூகப் படங்களிலும் நடிப்பதற்குப் பூரண யோக் யதையுள்ளவர்கள். அவர்களைக் கொண்டு வந்து நிறுத்தி ஹரிச்சந்திரன், சந்திரமதி போல் சாதுக்களாக நடி யுங்களென்றால் பாவம், அவர்கள் என்னதான்செய் வார்கள்!"

"அப்படியானால் சின் னப்பா நடிப்பு நன்றாயில் லையா?"

"நடித்தால் நன்றாய்த்தா னிருந்திருக்கும்! போகிறது,

நடிப்புத்தான் இல்லை, தோற்றமாவது நன்றாயிருக்கிறதா? ராஜா உடையில் சற்று பொருத்தமாயிருக்கிறது. மயான காண்டத்தில் சகிக்கவேயில்லை. சட்டையும், இடுப்பில் மல்யுத்தத்திற்குச் செல்வதற்கேற்ற துணிக்கட்டையும், காலில் காலத்திற்கேற்ற ஜோட்டையும் அணிந்து வெறுக்கத்தக்க முறையில் தோற்றுகிறார். ஒன்றிரண்டு பாட்டை எதிர்பார்த்தேன்; எல்லாம் ஒரே ஏமாற்றம்."

"கண்ணாம்பாள்?"

"இறந்த மகனைத் தேடிச் செல்லும் கட்டம் உயர்தரம். எசமானியின் அனுமதி வார்த்தைகள் பூர்த்தி பெறுமுன்பே தலைவிரி கோலமாக ஓட ஆரம்பிப்பது, புத்திரனைப் பறிகொடுத்த தாயின் உள்ள நிலையைத் தெற்றென எடுத்துக் காட்டுகிறது. ஆனால், தேடிக்கொண்டே வருகையில் பாட ஆரம்பிப்பதுதான் நன்றாயில்லை. ஆலமரத்தில் முட்டிக்கொண்டு "ஆலமரமென்பது இதுதானோ!" என்று அலறுவது மெய்சிலிர்க்கச்செய்கிறது. மகனை மடியில் போட்டுக்கொண்டு பைத்தியம்போல் பாசாங்கு செய்வது இயற்கையாயில்லை. 'இதுபோன்ற இடங்களில் பைத்தியமாக நடித்தால்தான் சினிமாவுக்கு அழகு' என்ற ஒரு பொது விதியை அனுஷ்டிப்பதுபோலிருக்கிறது.

மயான காண்டத்தில் சந்திரமதிக்கு எவ்வளவோ அவசியமானவையும், உள்ளத்தை உருக்கக்கூடியவையுமான இடங்கள்—கண்ணாம்பாள் அப்படியெல்லாம் சிரமப்படமுடியாதென்று ஆரம்பத்திலேயே மறுத்து விட்டாரோ, அல்லது நிர்வாகிகளின் அலட்சியமோ தெரியவில்லை, படத்தின் ஜீவநாடி வெலவெலவென்றிருக்கிறது."

"பாலசுப்ரமண்யம் நன்றாக நடித்திருக்கிறாரல்லவா?"

"கேட்பானேன்? விசுவாமித்திரர்போன்ற கோபாக்கிராந்தராகவும், மற்றும் விழிபிதுங்கும் விறுவிறுப்புப் பேர்வழிகளாகவும் நடிப்பதற்குப் பூரண வல்லமையுண்டு என்பதை எப்போதும் போல் எடுத்துக் காட்டியிருக்கிறார். இந்தப் படத்தில் அவருக்கு வெற்றிதான்."

"குழந்தை சேதுராமன் விஷயம் என்ன?"

"அவனைக் குழந்தையாகவே பாவித்துவிட்டார்கள் போலும்! நடிக்கவேண்டிய சந்தர்ப்பத்தையே கொடுக்கவில்லை."

"நாராயணராவைத்தான் எப்போதுமே உங்களுக்குப் பிடிக்கும்."

"சந்தேகமில்லாமல்! தான் நன்றாய் நடிப்பதின்மூலம் படத்தில் வரும் சம்பவங்களின் உயர்வு தாழ்வுகளையும், மற்ற நடிர்ககளின் திறமையையும்,

திறமையின்மையையும் வெளிப்படுத்துவதில் நிபுணர். அவரை ஆதாரமாகக் கொண்டு மேற்கண்ட விஷயங்களை ஊஹித்து அறிந்து கொள்ள வேண்டிய பொறுப்பு ரசிகர்களுடையது.

உதாரணமாக, நட்சத்திரேயன் 'பசி பசி' யென்று துடித்ததும், சந்திரமதி மாய சக்தியால் கனிகளை ஆகாயத்திலிருந்து விழச்செய்ய கானமாழை பொழிய ஆரம்பிக்கவும் நட்சத்திரேயன் பசி, தாகம், களைப்பு எல்லாவற்றையும் மறந்து திறந்தவாயும், அகன்ற கண்ணுமாக உட்கார்ந்து சந்திரமதியையே நோக்குவதில் எத்தனை ரசமான தாத்பர்யம் இருக்கிறது! நல்ல வேளை! பாட்டு முடிந்து இதோபதேசம் செய்யும் போது "இவ்வளவு உருக்கமாகப் பாடினயே சந்திரமதி, உன் பாட்டுக்காகப் பொத்தென்று எங்கிருந்தோ பழங்களும் விழுந்தனவே, இப்படியே பாடி என் பணத்தையும் வரவழைத்துவிடக்கூடாது?" என்று கேட்டு சந்திரமதியை அவதிக்கு ஆளாக்கிவிடுவாரோ என்று பயந்தேன். அந்த மட்டில் நல்லவர்தான்."

"அதெல்லாம் சரி. கிருஷ்ணன், மதுரம் எக்ஸலெண்ட், இல்லையா?"

"ஆமாம்!........ஆமாம்!!........ ஆமாம்!!!"

"என்ன? எனக்காகவா?"

"அட தேவுடா! இத்தனை நாழிகையாக உமக்காகவா பேசினேன்? வாஸ்தவத்திலேயே கிருஷ்ணன், மதுரம் எக்ஸலெண்டுதான். ஆனல்—"

"சொல்லும் சொல்லும். மறைப்பானேன்?"

"மறைப்பதற்கொன்றுமில்லை. சிறந்த ஹாஸ்ய நடிகர்களாக இருந்தும் சிற்சில படங்களில் சிற்சில இடங்களில் அவர்களுடைய ஹாஸ்யக் கூத்து ரொம்ப 'அதி'யாக இருப்பதை நினைத்து வருத்தப் படாமலும் இருக்க முடியவில்லையல்லவா? இந்தப் படத்தில் கிருஷ்ணனும் மதுரமும் சக்தி பெரிதா; சிவம் பெரிதா? என்று தகராறு செய்து கொள்ளுகிறார்களே, விஷயமென்னவோ சிறந்ததுதான். ஆனல் ஆண் பெண்ணாகவும், பெண் ஆணாகவும் உடைகளை மாற்றிக்கொண்டு, சண்டையிடும்போதும், பெண்வேஷத்திலிருக்கும் கிருஷ்ணனின் மேலாடை நெகிழ்ந்து கீழே விழுந்துவிட, அந்த நிலைமையிலேயே சற்று நேரம் நமக்குக் காட்சியளிக்கும்போதும் சிரிப்புவரும் போலிருந்தாலும் விரஸமாக

இருக்கிறது. அதிலும் அவர்களே காலகண்டன் தம்பதிகள் என்பதை அறியும்போது ஆத்திரங்கூட வருகிறது. கற்பனைக்கும் ஒரு எல்லை உண்டல்லவா?"

"இப்படி ஒரேயடியாகக் குற்றம் சொல்லிக்கொண்டே போனால் நல்ல அம்சம்தான் எது? சிறந்த நடிகர்தான் யார்?

"கிளிப் பிள்ளையின் கூற்றுக்கு என்னை ஆளாக்க வேண்டுமென்பது உமது விருப்பம் போலும். ஏதோ ஒரு படத்தில் தென்னை மரம், ஆட்டுக்குட்டி முதலியவைதான் சிறந்த நடிகர்கள் என்று ஒரு பத்திரிகையில் சில வருஷங்களுக்கு முன் வெளியாகியிருந்தது. இப்பொழுது நானுந்தான் அந்த மாதிரி சொல்லவேண்டி யிருக்கிறது. இந்த ஹரிச்சந்திரா தமிழ் பேசும் படத்தில் நன்கு நடித்திருப்பது சர்ப்பம்தான். அதற்கு, தான் சினிமாவில் நடிப்பது தெரியாதோ அல்லது ஞாபகந்தானில்லையோ, நன்றாகப் படமெடுத்து ஆடிப் புகழக்கூடிய முறையில் லோகிதாசனைக் கடித்தது. கொஞ்ச நாள் முன் ஒரு பத்திரிகையில் கூட இதைப்பற்றி பிரமாதமாக விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அது முற்றும் பொருத்தந்தான்.

வானிசை

9—2—44 காலை 8–30 மணிக்கும் பகல் 1–40 மணிக்கும் திருச்சி ரேடியோவில் மாயவரம் ஸ்ரீ கே. வி. வேணுகோபாலய்யர் பாடினார். சுவாமி சரவணபவானந்தரின் தமிழ் சாகித்தியங்கள். நல்ல கருத்துக்களுடனும், இனிமையான பதங்களுடனும் அமைக்கப்பட்ட மேற்படி உருப்படிகளை சுருதி சுத்தமாகவும், அபூர்வமாகவும் பாடியது கொண்டாடத்தக்கது. புரோகிராம் நடுப்பகலாக இல்லாமலிருந்திருந்தால் இன்னும் சோபித்திருக்கும்.

ஸ்ரீகணபதி கோட்டை விலாஸ்
கே. ஆர். ராஜாவின்
19-45 அசல் சிவபுரி புகையிலை
காரம், மணம், குணம் அனைத்திலும் சிறந்தது.
எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.
— தயாரிப்பவர் —
கேசவ ராஜகோபால் நாயுடு,
மாயவரம்.

அபராதி

கமலா பத்மநாபன்

*

மாலைக் கதிரவனின் மஞ்சள் வெய்யில் பிரும்மாண்டமான கண்ணம்பாடி அணைக்கட்டின் மீது விழுந்து பக்கத்திலிருந்த அகண்ட ஜலத்தேக்கத்தையும், சுற்றுப்புற இயற்கைக் காட்சிகளையும் தனது பொன்னிற ஒளியால் இன்னும் அதிக அழகுபடுத்திக்கொண்டிருந்தது. நானும் எனது பர்த்தாவும் குழந்தையைக் கைவண்டியில் வைத்துத் தள்ளிக்கொண்டு சுறுசுறுப்பாய் 'டாம்' ரஸ்தாவின்மீது நடந்து போய்க்கொண்டிருந்தோம். அன்று வழக்கத்திற்கு விரோதமாக அங்கு ஜன நடமாட்டம் சொற்பமாக இருந்தது. பக்கத்து ஊரில் நடக்கும் திருவிழாவுக்கு எல்லோரும் போயிருப்பார்கள் என்று என் கணவர் கூறினார். எனக்கு என்னவோபோலிருந்தது. எப்பொழுதும் 'ஜேஜே' என்றிருக்கும் ஜனத்திரள் நிறைந்த இடம் நிர்மானுஷ்யமாயிருப்பதென்றால்?

நாங்கள் அணைமேலே நடந்து அதனுடைய தென் கோடிக்கு வரும்சமயம் சூரியன் மறைந்தான். லேசாக இருளின் சாயை படரத் தொடங்கியது. அதுகாறும் 'கப்சிப்' என்று வண்டியில் உட்கார்ந்து வந்த குழந்தை மேற்கொண்டு தன்னாலந்தச் சிறைவாசத்தைச் சகிக்க முடியாதென்பதை அறிவிப்பதே போன்று ரகளைசெய்து அழத் தொடங்கிற்று. அதை வண்டியினின்றும் எடுத்துக்கொண்டு ஒரு பிஸ்கட்டைக் கொடுத்துச் சமாதானம் செய்தேன். அவர் நிச்சலமான ஜலப்பரப்பையும், அஸ்தமனத்தின் அழகுத் தோற்றத்தையும் பார்த்துக்கொண்டு மெய் மறந்து நின்றார். எதிர்ப்புறத்திலிருந்து ஒரு மனிதர் வந்தார்.

என் கணவரும் அவரும் நட்பினர்போலும். இருவரும் வந்தனம் செய்துகொண்டு புன்முறுவலுடன் ஏதோ பேசத் தொடங்கினார்கள். பேச்சுவாக்கில் லேசான நடை. அந்த சமயம் குழந்தை அசாத்தியமாகச் சிரித்து விளையாடவே நான் அதன் லீலையில் லயித்துவிட்டேன். சற்று நேரத்திற்குப்பின் திரும்பிப் பார்த்தேன். அவர்களிருவரும் கைகோர்த்த வண்ணம் வெகுதூரம் சென்றுவிட்டதையறிந்தேன். இருளின் வருகை, நிர்மானுஷ்யம், நீர்த்

தேக்கத்தின் பரந்த தோற்றம் எல்லாம் சேர்ந்து என் மனதில் ஒருவித பீதியை உண்டுபண்ணத் தொடங்கிற்று. அவரோ சீக்கிரத்தில் திரும்பிவரும் வழியாயில்லை. குழந்தையை யெடுத்துக்கொண்டு அவரிருக்குமிடம் சென்றுவிடலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கையில் "அம்மா!" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத்திரும்பினேன். மறு கணம் "ஐயோ!" என்று அலற எத்தனித்தவள் தைரியத்தை எப்படியோ வரவழைத்துக்கொண்டு "யார் நீ?" என்றேன். அழுக்கடைந்த கந்தைகளையுடுத்து தாடி மீசைகளுடன் கோர சொரூபமாய் எதிரில் நின்றிருந்த உருவம் ஒரு முறை சிரித்தது. அந்தச் சிரிப்பு மிகவும் பயங்கரமாயிருந்தது. ஆனால் அடுத்த நிமிஷம் அந்த மனிதன் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் என் பயத்தை அடியோடு போக்கி விட்டதோடு என்னைப் பரமாச்சரியத்தில் ஆழ்த்தியது.

"என்னைத் தெரியவில்லை? நான் தான் சாமா."

"என்ன? சாமாவா?"

"ஆமாம். சமையல்கார சாமா தான்"

"நிஜமாகவா?..............."

"சத்தியமாக."

"அந்தக் குழந்தை?"

"அது அப்பொழுதே இறந்து விட்டது."

"அடப்பாபமே!..........."

திறந்தவாய் மூடாமல் பூமியை நோக்கியபடி சிந்தனையிலாழ்ந்திருந்தேன். எவ்வளவு நேரம் அப்படியிருந்தேனோ தெரியாது. "அப்படி என்ன ஆழ்ந்த யோசனை?" என்ற வார்த்தையைக் கேட்டு சுய உணர்வு பெற்றுத் தலை நிமிர்ந்தேன். சாமாவைக் காணவில்லை. என்னெதிரில் என் புருஷர்தான் நின்றிருந்தார். நாலாபுறமும் மருள மருள நோக்கினேன். அவர் பரிகாசம் செய்தார். நான் நடந்ததைக் கூறினேன். "அடாடா! சற்றுமுன்தான் என்னெதிரில் வேகமாகப் போய்க்கொண்டிருந்தான். அவன் சாமாவா? அடபாவமே! யாரோ பிச்சைக்காரன் என்றல்லவோ நினைத்தேன்! சரி, சற்று இரு. இதோ ஓடிச்சென்று அவனையழைத்து வந்துவிடுகிறேன். அதிக தூரம் போயிருக்கமாட்டான்.-"என்று போகப் புறப்பட்டார் அவர். நான் தடுத்து நிறுத்தினேன். "நல்ல வேளையில் வீடுபோய்ச் சேருவோம் வாருங்கள். என் மனசு ரொம்ப வேதனைப்படுகிறது" என்று முடிப்பதற்குள் அவரும் புறப்பட்டு விட்டார். இருவரும் மௌனமாகவே வீட்டையடைந்தோம். ஒருவாறு சாப்பாடு முடிந்தது. மனம் ஒரு விநாடிகூட ஒரு நிலையில்லாமல் தத்தளித்தது. எதிலுமே செல்லவில்லை. திரும்பத் திரும்ப பழைய சம்பவங்களும், அன்று

நிகழ்ந்த புது சம்பவமும் மாறி மாறி மனத்தில் தோன்றி என் இதயத்தைப் புண் படுத்திற்று. படுக்கையில் படுத்துப் புரள்வ வதும், அடிக்கடி பெருமூச்சு விடுவதுமா யிருந்தேன். என் மனச்சாட்சி என்னைக் குற்றம் சாட்டி இடித்தது. அந்த வேதனை தாளாமல் ஒரு முறை "அடி சண்டாளி!" என்று என்னை நானே திட்டிக்கொண்டேன். பாதிநிசியில் அந்த ஆக்ரோஷமான வார்த்தையைக் கேட்டுப் பக்கத்தில் படுத்திருந்த என் புருஷர் கண் விழித்து என்னை சமாதானம் செய்து தூங்கச் சொன்னார். கண்களை மூடினேன். நான் தூங்கிவிட்டதாக எண்ணி அவர் நித்திரையிலாழ்ந்தார். எனக்குத் தூக்கம் வருமோ? அபராதி மனதிற்கு அமைதி ஏது? என் உள்ளப் போர்க்களத்தில் பத்து வருஷத்திற்குமுன் நிகழ்ந்த கொடிய சம்பவங்களின் சின்னங்கள்:—

* * * *

அன்றும் இன்று போலவே தான் மாலை வேளையில் நாங்கள் அணைக்கட்டுப்பக்கம் உலவப் போனோம். இருட்டும் சமயம் தான் திரும்பினோம். அப்போது ஒரு சம்பவம்.

ஒரு ஸ்திரீ கையில் சிறுகுழந்தையை அணைத்தபடி எங்கள்பின்னால் வந்து கொண்டிருந்தாள். மங்கிப் போன வெளிச்சத்தில் முகம் சரியாகத் தெரியவில்லை. நான் சற்று நின்று திரும்பிப் பார்த்ததையறிந்த அவள் விரைவாகவே நடந்து வந்தாள். என்னை அணுகினதும் "அம்மா! உங்களுக்கு இந்த ஊர்தானா? அல்லது கண்ணம்பாடி அணைக்கட்டைப் பார்ப்பதற்காக வெளியூரிலிருந்து வந்திருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"இந்த ஊர்தான் எங்களுக்கு. நீங்கள் யார்? இந்த இருட்டு வேளையில் சின்னஞ்சிறு குழந்தையுடன் புருஷத் துணையில்லாமல் தன்னந் தனியே வந்து கொண்டிருக்கிறீர்களே!" என்று ஆச்சர்யத்துடன் கேட்டேன்.

அவள் ஒருவெறுப்புச்சிரிப்புச் சிரித்தாள். "புருஷத் துணையா? கட்டின புருஷன் கைவிட்டு சொல்லாமல் ஓடிப்போன பிறகு என்னைப்படைத்த அந்த பரமாத்மாதான் எனக்குப் புருஷத்துணை, பொம்மனாட்டித்துணை எல்லாம்." என்றாள்.

நானும் அந்தப்பெண்மணியும் பேசிக்கொண்டே நடந்து வருவதை அறிந்த என் கணவர் குழந்தையைத் தூக்கிக்கொண்டு சற்று முன்னால் நடந்து சென்றார். நான் அப்பொழுது அந்தப் பெண்ணின் முகத்தைக் கவனித்தேன். வெளுத்து சோர்ந்து போயிருந்த அவள் வதனத்தில் ஒரு துக்கச்சாயை படர்ந்திருந்தது. "நீங்கள் எந்த ஊர்? இப்பொழுது எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்?" என்று அவளைப் பார்த்துக் கேட்டேன்.

“எனக்கு ஊருமில்லை, பேருமில்லை. நான் ஒரு திக்கற்ற பரதேசிப் பெண் அம்மா. இந்தக் குழந்தை பிறந்தது முதல் இப்படியேதான் பைத்தியக்காரி போல் ஊர் ஊராய் அலைந்து கொண்டிருக்கிறேன். ஏதாவது கூலி வேலை செய்து பிழைக்கலாம் என்றால் அதற்கு முட்டுக்கட்டையாக இந்தப் பிரதி பந்தகம் (குழந்தையைக் குறிப்பிட்டு) ஒன்று இருக்கிறதே!” என்று பெருமூச்செறிந்தாள்.

“சரியாய்ப் போச்சு! யாசகம் கேட்பதற்குத்தானா இவ்வளவு பூர்வ பீடிகையும்?” என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டேன் நான். சிறிது நேரம் இருவரும் மௌனமாகவே நடந்து போய்க்கொண்டிருந்தோம். மறுபடி நானாகவே பேச்சைத் தொடங்கினேன். “உங்கள் புருஷன் உங்களை விட்டு ஓடிப்போய் எவ்வளவு காலமாயிற்று? என்ன காரணம்? அவர் இருப்பிடம் உங்களுக்குத் தெரியாதா?” என்று வினவினேன்.

“இந்தக் குழந்தை வயிற்றில் ஆறு மாதம். அப்பொழுதுதான் எங்களிருவருக்கும் ஏதோ சில்லறை மனஸ்தாபம் ஏற்பட்டது. எனக்கும் வாய்த்துடுக்கு ஜாஸ்தியென்றுவைத்துக் கொள்ளுங்கள். ‘எத்தனை நாளைக்கு நீங்கள் இப்படி சோம்பேறியாகக்காலம் கழித்து கையாலாகாத கர்ப்பிணி நானுவீடு ஏறி இறங்கி உழைத்துச் சம்பாதிப்பதைச் சாப்பிட்டு ஏப்பம் விடுகிறது? வயிற்றுப் பிள்ளை கீழே விழும் பரியந்தம் என்னால் மட்டும் வேலைசெய்ய முடியுமா? நீங்கள் ஆண்பிள்ளை இல்லையா?’ என்று சற்று காரமாகவே பேசி அவர் மனம் நோகச் செய்துவிட்டேன். அன்றைய தினமே நடுநிசி வேளையில் யாருமறியாமல் படுக்கையைவிட்டு எழுந்து போனவர்தான். அப்புறம் அவர் இருப்பிடமே தெரியவில்லை. அவர் இப்படி மறைந்த பிறகு, வேறு திக்கில்லாதநான் திண்டாடித் தெருவில் நின்று தர்ம ஆஸ்பத்திரியில் இந்த துர் அதிர்ஷ்டம் பிடித்த குழந்தையைப் பெற்றெடுத்தேன். இதற்கு இப்பொழுது ஆறு மாதமாகிறது. அவரும் ஓடிப்போய் கிட்டத்தட்ட ஒரு வருஷமாகப் போகிறது. எங்கே இருக்கிறாரோ, என்ன செய்கிறாரோ ஒரு தகவலும் தெரியவில்லை. எங்கள் ஊரில் சொன்னார்கள், அவர் இந்தக் கண்ணம்பாடி அணைக்கட்டில் கல் மண் சுமந்து கூலிவேலை செய்து சம்பாதிப்பதாக. அதை நம்பிக்கொண்டு ஐம்பது மைல் தூரத்திலிருந்து, வழிநெடுக பலகஷ்டங்களுக்காளாகி, கால்நடையாக இங்குவந்து சேர்ந்து இரண்டு தினங்கள் ஆகின்றன. கூலிக்காரர்கள் வேலை செய்யும் கும்பலில் எல்லாம் வெட்கத்தை விட்டு நுழைந்து அவர் இருப்பாரோ என்று தேடித் தேடி அலைந்தேன். ஒரு பலனுமில்லை. அவரைத் தேடி அலைந்த என் கண்கள் பூத்துப்போயின.

உடலும்சோர்ந்து போயிற்று!" என்று துக்கமும் ஏக்கமும் நெஞ்சை அடைக்க தன் சரித்திரத்தைக் கூறினுள் அப் பெண்மணி.

எனக்கு அவளுடைய உருக்கமான கதையைக் கேட்டவுடன் முதலில் ரொம்ப பரிதாபமே ஏற்பட்டது. ஆனுல் அடுத்த சில நிமிஷங்களுக் கெல்லாம் சற்று யோசித்துப் பார்த்த பிறகு, இவையெல்லாம் யாசகம் கேட்பதற்காக முன்கூட்டியே தயாரிக்கப் பட்ட புரளிக் கதையாக இருக்கலாமென்றும் இவள் உண்மையில் நடத்தை கெட்டுப்போன நங்கையாக இருந்தாலும் இருக்கலாமென்றும் ஊகித்து முடிவு செய்தேன். இந்த அருவருப்பான எண்ணம் என் மனதில் உதித்ததும் எனக்கு அவளிடம் மறுபடியும் பேச்சுக் கொடுக்க இஷ்டம் வரவில்லே. இதற்குள் நாங்கள் "டாமின்" ஆரம்ப வாசலான இடத்தை நெருங்கிவிட்டோம். நான், முன்னுல் சென்று கொண்டிருந்த என் கணவரை அணுகி அவரிடமிருந்து நான்கணுவை வாங்கிக்கொண்டு வந்து அந்தப் பெண்ணிடம் நீட்டி "இந்தாருங்கள், என்னுலான உபகாரம்" என்று அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்காமலே கூறினேன். அவள் சிறிது தயங்கி, பிறகு நான் கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டாள். பிறகு கெஞ்சும்குரலில் "அம்மா, நானும் உங்கள் வீட்டிற்கு உங்களோடு வருகிறேன். இரவு மாத்திரம் அங்கு தங்கிவிட்டு காலேயில் எழுந்து போய்விடுகிறேன். குழந்தைக்கு மாத்திரம் கொஞ்சம் பால் கொடுத்தீர்களானுல் ரொம்பப் புண்ணியமுண்டு. இந்தமாதிரி எவ்வளவோ இரவுகள் நான் தனிமையில், இன்னும் பயங்கரமான இடங்களில் கழித்து இருக்கிறேன். ஆனுல் இன்று என்னவோ என் மனது சரியாக இல்லே." என்ருள்.

"இதேதடா பெருந்த வம்பாய் இருக்கிறதே!" என்று நிஃனத்து அவளுக்கு என்ன பதில் சொல்வது என்று தோன்ருமல் சற்று யோசித்தபடி அங்கேயே நின்றுவிட்டேன்.

"மணி எட்டாயிற்றே! என்னிற்கிருய்? குழந்தைக்குப் பால் புகட்டும் நேரமாகவில்லேயா?" என்று என்னேத் தாண்டினுர் அவர். நான் அவரை சற்று அப்பால் அழைத்துக் கொண்டு போய் தணிந்த குரலில் அந்த ஸ்திரீயின் சரித்திரத்தையும் அவளது வேண்டுகோளேயும் கூறி "அவளுக்கு என்ன சால்ஜாப்பு சொல்வது?" என்று கேட்டேன்.

அவர் எப்பொழுதுமேரொம்ப தயாள குணமுடையவர். "சால்ஜாப்பு சொல்வானேன்? நம் வீடோ பெரிசாய் இருக்கிறது. இரவு அங்கு படுத்திருந்துவிட்டு காலேயில் எழுந்து போகட்டுமே! பாவம், கைக்குழந்தையுடன் அவள் இந்த

இருட்டில் எங்கே போவாள்?" என்று அனுதாபத்துடன் புகன்று அவள் நின்ற திக்கில் திரும்பிப் பார்த்தார்.

எனக்கு இந்த ஏற்பாடு கட்டோடு பிடிக்கவில்லை. மனதைத் திறந்து "யாரோ எவளோ! அவள் நடத்தை எப்படியோ! அவளை நம் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போகிறதாவது? வெட்கக் கேடுதான்! குழந்தையை நினைத்தால் பரிதாபமாய்த்தானிருக்கிறது. அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? அவள் குழந்தைக்கு வேண்டுமானால் ...." என்று மேலே கூறுவதற்குள் அந்தப் பெண்மணியே தளர்ந்த நடையுடன் எங்களை நோக்கி வருவதை அறிந்து நான் சட்டென்று பேச்சை நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தேன். என் மனதை அறிந்து கொண்டவள் போல் அவள் "அம்மா, உங்களுக்கு சிரமம் வேண்டாம். நீங்கள் வீட்டிற்குப் போங்கள். உங்கள் வீடு இன்னும் தொலையில் இருக்கிறதோ என்னமோ. இப்பொழுது எனக்கு ஏற்பட்டிருக்கும் உடம்பு அலுப்பில் என்னால் இனி ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாதுபோலிருக்கிறது. இதோ சமீபத்தில் தெரியும் பாழ் மண்டபத்தில் படுத்திருந்துவிட்டு காலையில் எழுந்துபோகிறேன். குழந்தையும் தூங்கிவிட்டது. இனிமேல் காலையில்தான் அது கண் விழிக்கும்." என்று கூறிவிட்டு அருகிலிருந்த பாழ்மண்டபத்தை நோக்கி தள்ளாடிய வண்ணம் நடந்து போனாள்.

"ஒழிந்தது சனி!" என்றெண்ணி நானும் நிம்மதியடைந்தேன். அவர் மாத்திரம் வீடு வந்து சேருகிறபரியந்தம் வழி நெடுக புலம்பிக் கொண்டே இருந்தார். "பாவம்! அவள் சொன்ன கதை நிஜம்தானோ என்னவோ! அவள் முகத்தைப் பார்த்தால் கெட்டவளாக ஒன்றும் தோன்றவில்லை. இரவெல்லாம் இந்தக் குளிரில் அவ்விரு ஆத்மாக்களும் விறைத்து சாகப் போகின்றனவோ என்னமோ! என்ன உலகம் இது? கஷ்டப்படும் ஆத்மாக்களை கடவுள் சீக்கிரம் கொண்டு போய் விடக் கூடாதா?" என்று அனுதாபப் பட்டார்.

நாங்கள் வீடுவந்து சேரும் பொழுது எட்டரைமணி ஆகிவிட்டது. சமையற்கார சாமா தயாராய் காய்ச்சி ஆற்றி வைத்திருந்த பாலைக் குழந்தைக்குப் போட்டியவுடன் அதுவும் தூங்கிவிட்டது. என் மனசு இப்பொழுது ரொம்ப வேதனைப் பட்டது. ஏதோ உணர்ச்சியினால் தூண்டப் பட்டவளாய் கொஞ்சம் பாலை ஒரு சீசாவில் நிரப்பினேன். நான்கு வாழைப் பழங்களையும் எடுத்து ஒரு காகிதத்தில் சுற்றி, பால் சீசாவையும், பழத்தையும் சாமாவிடம் கொடுத்து "இந்தா; ஸைக்கிளை எடுத்துக்கொண்டு சீக்கிரம் போய் இதை அந்தப் பெண்ணிடம் கொடுத்துவிட்டு வா."

என்று அவசரமாய் உத்திரவிட்டேன்.

சாமா முழித்தான் "எந்தப் பெண்ணிடம் அம்மா? எங்கே போகச்சொல்கிறீர்கள்?" என்று ஒன்றும் விளங்காமல் திகைத்தான் அவன்.

என் பரபரப்பையும் நான் சாமாவுக்கு அறை குறையாய் உத்திரவிட்டதையும் கண்ட அவர் சிரித்துக்கொண்டே "இப்பொழுது அவள்மேல் இரக்கம் வந்துவிட்டதா? உன் ஆத்திரத்தில் சாமாவுக்கு விஷயம் விளங்காமல் உத்திரவு இடுகிருயே?" என்று என் பிசகை எடுத்துக் காட்டினார்.

நான் சாமாவைப் பார்த்து "டாம் வாசலுக்கு அருகில் ஒரு பாழ்மண்டபம் இருக்கிறது பார். அங்கே பிச்சைசக்காரி போன்ற பெண்மணி சின்னக் குழந்தையுடன் படுத்திருப்பாள். அவளிடம் இந்தப் பாலேயும், பழத்தையும் கொடுத்து விட்டு வா" என்றேன்.

சாமா முணு முணுத்துக் கொண்டே ஸைக்கிளை எடுத்துக் கொண்டுபோனுன். அரைமணி நேரத்திற்கெல்லாம் திரும்பி வந்த அவன் கையில் நான் கொடுத்த பாலும், பழமும் அப்படியே இருக்கக் கண்டு வியப்புடன் "என்னடா, அவள் வாங்கிக் கொள்ள மறுத்து விட்டாளா?" என்று கேட்டேன்.

"இல்லேயம்மா! நீங்கள் சொன்னபடி அந்தப்பாழ்மண்டபத்திற்குப் போய் பார்த்தேன். அங்கு யாரையும் காணவில்லே. சுற்று முற்றும் தேடிப் பார்த்தேன். ஒருவரும் தென்படவில்லே. டாம் வாசலில் இருக்கும் காவற்காரனேக் கேட்டேன். அவன், அந்தப் பெண்மணி குழந்தையுடன் ஸ்டேஷன் ரஸ்தாவில் போனதாகக் கூறினுன். ஆகையால் நான் திரும்பி வந்து விட்டேன்" என்று பதில் சொன்னுன் சாமா.

நாங்கள் சாப்பிட உட்கார்ந்தோம். எனக்கு சாதமே வேண்டியிருக்கவில்லே. "அந்த திக்கற்ற பெண்ணே வீட்டிற்கு அழைத்துவந்து ஒருவாய் சாதமாவது போட்டு அனுப்பத் தோன்றிற்ரு? பாவம், அந்தக் குழந்தையும், அவளும் பசியோடு தவிக்கிருர்களோ என்னமோ? நாம் இங்கே கவலேயில்லாமல் மூக்கைப்பிடிக்கத் தின்கிருேம்!" என்றுஎண்ணி பச்சாதாபப்பட்டேன். மனதை சொல்லமுடியாத ஒரு வேதனே அறுத்தது. அப்பரதேசிப் பெண்ணின் பரிதாபகரமான வதனம் அடிக்கடி என் மனக்கண்முன் தோன்றி என்னே ஏளனம் செய்வதுபோல் உணர்ந்தேன்.

மறுதினம் காலே எழுந்தவுடன் கண்ணம்பாடி பூராவும் அல்லோல கல்லோலப் பட்டது. யாரோ ஒரு பெண் முன்னிரவு ரிஸர்வாயரில் விழுந்து தற்கொலே செய்து கொண்டுவிட்டாளாம்!

இந்த பயங்கர வதந்தி ஊரெல்லாம் பரவி எங்கும் அதே பேச்சாகவே இருந்தது. ஏற்கனவே தீராத வேதனைப் பட்டுக்கொண்டிருந்த என் உள்ளம் இன்னும் எவ்வளவு அதிகமாய்த் துடித்திருக்கும்?

நானும் என் கணவரும் இந்தச் செய்தியைக் கேட்டு மிகவும் வருந்தி அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில் சாமா காப்பியைக் கொண்டு வந்து வைத்துவிட்டு ஏதோ கேட்க விரும்புபவன்போல் பல்லை இளித்துக்கொண்டு அங்கேயே நின்ருன்.

"என்னடா?" என்றேன். "அணைக்கட்டுக்குப் போய்விட்டு வரேன்" என்று கெஞ்சினன் அவன். "எதற்காக?" "ரிஸர்வாயரில் விழுந்து தற்கொலை செய்துகொண்ட ஸ்த்ரீயின் உடல் தண்ணிமேல் மிதந்து வந்ததாம். கரையில் இழுத்துப் போட்டிருக்கிருர்களாம். ஊரில் எல்லாரும் பார்க்கப் போகிருர்கள்..............." "ஐயோ கண்ருவியே! இதைப்போய் வேடிக்கை பார்க்கவும் வேண்டுமா?" என்று நான் தலையிலடித்துக்கொண்டேன். ஆனல் சாமாவின் உள்ளத்தில் ஆவல் அசாத்தியமாய் இருப்பதாக அவன் முக சேஷ்டைகள் எடுத்துக் காட்டின.

"உம். சரிசரி. போய்விட்டு சீக்கிரம் வந்துசேரு" என்று சொல்லி முடித்தேன். என் வார்த்தை பூர்த்தி பெறுமுன் னம் தெருவைநோக்கி விரைந்து சென்றுவிட்டான் சாமா. அன்று பார்த்தவனை மீண்டும் இன்று மாலைதான் கண்டேன். ஆகா! அவனது தோற்றத்தில் தான் எத்தகைய மாறுதல்!

காலை எழு மணிக்குக் குதூகலத்துடன் குதித்தோடிய சாமா மணி பன்னிரண்டாகியும் திரும்பி வரவில்லை. அவனை அழைத்துவரும்படிக் கூறி சேவகனை யனுப்பிவிட்டு சமையலுக்கு அடுப்பை மூட்டினேன். அந்தஸ்து என்ற பெயரால் வளர்த்த செல்வ குழந்தையான சோம்பல் அத்தனை லகுவில் என்னைவிட்டுப் பிரிந்துவிடுமா? க்ஷணத்திற்கொருதரம் கொஞ்ச ஆரம்பித்தது. காரியங்கள் ஒன்றுமே செய்ய முடியவில்லை. சாமாவின்பேரில் எரிச்சல் எரிச்சலாக வந்தது. அவனை வாய் ஓயாது திட்டிக் கொண்டே ஏதோ வேலைகளைச் செய்தேன். அன்று அவர் ஆபீஸ் போகாமல் இதற்காகவே தங்கினர். தங்கி என்னப் பிரயோசனம்? குழந்தையை அழாமல் வைத்துக் கொண்டார். அன்று ஒரு கண்டம் போலிருந்தது எனக்கு. முதல்நாள் மாலையிலிருந்து சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கிறது உள்ளம். அதோடு பன்னிரண்டு மணிக்கு மேல் அதிகப் பழக்கமில்லாத சமையல்வேலை. இதையெல்லாம் கண்டமாகத்தானே கருதத் தோன்றும்?

மணி ஒன்று. சேவகன் திரும்பி வந்தான். சாமாவை எங்குமே காணவில்லையென்று மூக்காலழுதான். அவ்வளவு தான். அதன் பிறகு சாமா திரும்பி வரவேயில்லை. வெகு நாட்களுக்குப்பின் ஒரு கடிதம் வந்தது. அவன்தான் எழுதியிருந்தான்:—

"............ நானொரு மகாபாபி. பெண்சாதியையும், பிள்ளையையும், முச்சந்தியில் திண்டாட விட்ட கிராதகன். ரிசர்வாயரில் விழுந்து தற்கொலைபுரிந்து கொண்டவள் என் மனைவிதான் அவளுடைய பிணத்தைக் கண்ணாரக் கண்டேன். துக்கமும், சித்தப்பிரமமும் என்னை வெறியனாக்க, அன்பு நிறைந்த உங்களிடம் சொல்லிக்கொள்ளாமல் ஓடிவிட்டேன். ஊரூராயலைகிறேன். அவள் மரத்தடியில் போட்டிருந்த குழந்தையைப் பல முயற்சிகளின்பேரில் நானே எடுத்து வளர்த்து வருகிறேன். உங்கள் முகத்தில் விழிக்க லஜ்ஜையாக இருக்கிறது. என்னை மன்னிக்கவேண்டும்."—

மன்னிக்கவேண்டியது யார்? அபராதி நானல்லவா? அன்று அவள் விருப்பத்திற்கிணங்கி அவளை என் வீட்டிற்கு அழைத்து வந்திருந்தால் இத்தகைய கோலாகலங்கள் நேர்ந்திருக்குமா? "போகட்டும். அவள் – கஷ்ட ஜன்மாவாகிய அவள் ஏதோ இறந்தாள். குழந்தையையாவது சாமா காப்பாற்றி அதன் முகத்தில் துக்கத்தை ஆற்றிக்கொள்வான்" என்றெண்ணியிருந்தேன். இன்று மாலையில் அந்த ஆறுதலுமில்லையென்பது விளங்கிவிட்டது. குழந்தை அப்பொழுதே இறந்துவிட்டதாம். அவன் ஆண்டிக் கோலத்தில் அலைகிருன். இதற்கெல்லாம் காரணகர்த்தாவான என் நெஞ்சம் என்தான் துடிக்காது? பகவான்தான் என்னை மன்னிக்க வேண்டும்.

எழுத்தாளர்கள் கவனிக்க.

நமது பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக அநுப்பப்படும் கதை, கட்டுரை, ஹாஸ்யத்துணுக்கு, விமர்சனம், விடுகதை முதலிய எல்லா விஷயங்களும் பூர்ண சந்தோஷத்துடன் வரவேற்கப்படும். ஆனால் விஷயங்கள் ஒரு தனிபட்ட நபரையோ, மதத்தையோ, அரசாங்கத்தையோபற்றின ஆட்சேபகரமானதாகவும், ஏற்கனவே பிரசுரமானவைகளாகவும் மட்டும் இருத்தல் கூடாது. குற்றமற்ற எந்த விஷயமும் ஏது காரணத்தை முன்னிட்டும் புறக்கணிக்கப்படமாட்டா. ஆகவே ஆர்வமுள்ளவர்கள் எழுதலாம். காகிதத்தின் இருபக்கங்களிலும் எழுதலாம் புக் போஸ்டில் அனுப்பலாம். ஆனல் எழுத்துக்கள் புரியும்படி இருக்கவேண்டும். ஆனல் பிரசுரத்திற்கு வரும் விஷயங்களுடன் கடிதங்கள் இணைக்கக்கூடாது.

ஆசிரியர்.

மாய வாத்தியக்காரன்

126489.

ஏ. எப். முகம்மது மைதீன்

அமெரிக்க மலே நாடுகளிலே 'பெர்க்லி' என்ற ஒரு கிராமம். அங்கே முன்னொரு காலத்தில் 'கால்ட்வெல்' என்ற ஒரு வாத்தியக்காரன் இருந்தான். அவனுக்கு சங்கீதத்தில் விசேஷ பயிற்சி உண்டு. பல வகை வாத்தியங்கள் செய்வதிலும் பழக்கம் பெற்றவன். அவனிடம் தெய்வீக சக்தி ஒன்றிருப்பதாக ஜனங்கள் அறிந்து வியப்புற்றனர். ஆனால் அவன் யாருடனும் அதிகமாக நெருங்கிப் பழகாமல் பத்து வருடகாலம் துறவிபோல் வாழ்ந்து வந்தான். நாள் முழுவதும் ஏதாகிலும் ஒருவகை வாத்தியம் செய்வதிலேயே கண்ணயிருப்பான்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை. அவ்வூர் மாதாகோவிலில் அனைவரும் கூடியிருந்தனர். கால்ட்வெல் தன் தலையில் 'ஹார்மோனியம்' போன்ற ஒரு வாத்தியத்தைச் சுமந்துகொண்டு அங்கு வந்து சேர்ந்தான்.

பிரார்த்தனை முடிந்தது. அவன் அங்கு கூடியிருந்த ஜனங்களை நோக்கி, "நான் வெகு காலம் சிரமப்பட்டு தெய்வ அனுக்கிரஹத்தால் இதோ, இந்த வாத்தியத்தைச் செய்து முடித்தேன். இதை இந்தக்கோவிலில் வைத்து விடப் போகிறேன். இதன் மகத்துவம் யாதெனில், விவாகம் செய்துகொள்ளும் தம்பதிகள் இங்கு வந்து நம் குருவின் அனுக்கிரஹத்தைப் பெறும் சமயத்திலெல்லாம் அந்த விவாகம் கடவுளுக்குச் சம்மதமான உத்தம விவாகமானால் இந்த வாத்தியம் தானே வாசித்து இனிய கீதங்களைப்பாடும். அவ்விதமின்றி பெற்றோரின் வற்புறுத்தலுக்கிணங்கியோ, அல்லது அசுத்தமான மனதுடனோ, அன்றி வஞ்சக எண்ணத்துடனோ நடக்கிற விவாக காலங்களில் இது மௌனமாக இருந்து விடும்" என்று கூறி வாத்தியத்தை அங்கு வைத்து விட்டான்.

அன்று முதல் அவ்வூரில் பரிசுத்த மனதுடனும், உண்மைக் காதலுடனும் விவாகம் செய்து கொள்வோர் மட்டுமே அக்கோயிலுக்குத் தைரியமாகச் சென்றனர். அவ்விதமின்றி விவாகத்தின் மூலம் பொருள் சம்பாதிக்க முயற்சிப்போரும், அன்பு இல்லாதவரும், மற்ற எந்தவித அநியாய முறையைப் பின் பற்றுவோரும் அங்கு செல்லத்தயங்கினார்கள். நாளுக்கு நாள் இந்த அபூர்வ வாத்தியக்காரனது புகழ் நாமெடங்கும் பரவிற்று.

கால்ட்வெல் மணமாகாத இளம் வாலிபன். இவனுடைய

இளமையையும், அழகையும், திற மையையும் கண்டு பல மாதர்கள் அவன்பால் காதல் கொண்ட னர். அவர்களில் உத்தமியான ஒருவளைத் தேர்ந்தெடுத்து விவா கத்தையும் நிச்சயித்தான் கால்ட் வெல்.

ஊரெங்கும் இதே பேச்சு. கால்ட்வெல்லுக்குக் கலியா ணம். அச்சிறு ஊருக்கு, வேறு ஊர்களிலிருந்தும் ஜனங்கள் திரள் திரளாக வந்து இவனைக் கண்டு ஆசிகூறிச் சென்றனர். இதையெல்லாம் கண்ட கால்ட்வெல்லுக்குத் தன் மகத்து வத்தைப்பற்றிப்பெருமை கட்டுக் கடங்காமல் தோன்றி விட்டது.

"நான் கடவுளுக்குச்செய்திருக் கும் உதவிதான் என்னே! அந்தக் கோயிலுக்கு எத்தகைய அரிய வாத்தியத்தை யளித்திருக் கிறேன்! எனது விவாகம் நடை பெறும் பொழுது அந்த வாத்தி யம் ஆனந்தத்தால் மூழ்கிப் பாட் டுக்களை அள்ளிக்கொட்டும்!" என்றெல்லாம் மனக்கோட்டை கட்டினன்.

விவாக தினம் வந்தது. மண மக்கள் ஊர்வலம் பல தெருக் களைச் சுற்றி திரளான ஜனங்களை யும் அழைத்துக்கொண்டு வந்து மாதாகோயிலையடைந்தது. எங் கும் ஒரே குதூகலம். மணப் பெண்ணே தெய்வலோக ஸ்திரீ போல் விளங்கினள். எல்லோ ரும் தம்பதிகளை வாழ்த்தினர். கேவலம் மனித ஸ்திரீகளிடை யே இல்லாத ஒரு ஒளி அந்தப் பெண்ணின்பால் திகழ்ந்தது. ஆனல் அவளது கையைப் பிடித் திருந்த மணளனே பார்வைக் குக் கம்பீரமாகத் தோன்றின லும், உள்ளே தற்பெருமை நிறைந்தவனக இருந்தான். முகூர்த்தகாலம் சமீபித்து விட் டது.யாவரும் வாத்தியத்தையே நோக்கி நின்றனர். அதுவோ 'வளர்த்தகடா மார்பில் பாய்ந் தது' என்பதுபோல் வாயைத் திறக்கவேயில்லை. குருவோ மந்தி ரங்களைச் சொல்ல வாரம்பித்து விட்டார். மாயவாத்தியம் மௌ னம் சாதித்து விட்டது.

கால்ட்வெல்லுக்குக் கோபம் பொங்கிற்று. தான் அன்புடன் காதலித்த பெண் தன்னை வஞ்சி த்து விட்டாளெனவும், அவள் முழுமனதுடன் தன்னை விரும் பாததாலேயே கடவுளுக்கு இந்த விவாகம் சம்மதப்படவில்லை என வும், ஏதோ தன் புகழைக் கண் டுதான் அவள் தன்னை மணக்க இச்சித்தாள் எனவும், பல வித மாகக்கூறி அவளை வைதான்.

அவ்வுத்தமியோ தான் மனப் பூர்வமாக அவனையே காதலிப்ப தாக உறுதிகூறினள். கூறிப்பய னென்ன? சட்ட பூர்வமாக விவாகம் நடந்தேறினலும் கால் ட்வெல் அவளைத் திரஸ்கரித்து விட்டு வேறு தேசம் சென்று விட்டான்.

நாட்கள் ஓடிமறைந்தன. வருஷ ங்கள் பல ஆயின. கால்ட்வெல்

அநேக தேசங்களைச் சுற்றி யலைந்து கிழவனானான். நாள் ஆக ஆக மனைவியின் ஞாபகம் அவனுக்கு உண்டாயிற்று. தான் செய்த அநீதியைக் குறித்து வருந்தினான். ஒரு அபலையை அநாதையாக விட்டுவந்த ஸ்திதியை நினைத்து துக்கித்தான். கடைசியில் மீண்டும் அவளையடைந்து அவளிடம் மன்னிப்புக் கேட்டு அவளோடு வாழ்க்கையை நடத்தலாம் என்று உறுதி கொண்டான்.

புறப்பட்டான் தன் ஊரை நோக்கி. தன் சொந்த ஊரைக் கண்டதும் அவனுக்கு எல்லையற்ற ஆனந்தம் உண்டாயிற்று. அவன் உருமாறியிருந்ததால் அவனைச் சுலபத்தில் யாராலும் கண்டு கொள்ள முடியவில்லை. கொஞ்சதூரம் சென்றான். சலிப்பு மேலீட்டால் அங்கு ஒரு மரநிழலில் உட்கார்ந்தான். களைப்பு மிகுதியால் கண்கள் தானாக மூடின. உறக்கத்திலாழ்ந்தான்.

சிறிது நேரம் சென்றது. ஏதோ ஆரவாரத்தால் கண்களை விழித்தான். எதிரில் ஒருநீண்ட ஊர்வலம் வந்துகொண்டிருப்பதைக் கண்டான். ஒரு பெட்டியில் ஒரு பிணத்தைத் தூக்கிக்கொண்டு சிலர் வர, அதன் பின்னால் அநேக புருஷர்கள் ஜெபம் சொல்லிக்கொண்டு வந்தனர். இருபுறங்களிலும் மாதர்கள் மலர்களை வாரி இறைத்தனர். அவ்வூர்வலம் யாவர் மனதையும் உருக்கிவிடும் காக்ஷியாயிருந்தது.

கால்ட்வெல் அருகில் வந்த மனிதனை நோக்கி, 'இறந்தவர் ஒரு பெரிய மகான் போல் இருக்கிறதே! இது யார்?' என்று வினவினான். அதற்கு அவன் கூறிய பதிலாவது: 'இவ்வூரில் மாயவாத்தியக்காரன் ஒருவன் இருந்தான். அவனை மணந்த உத்தம ஸ்திரீ தான் இன்று இறந்து விட்டாள். அவள் ஆயுள் முழுதும் சந்நியாசினியாகவே வாழ்ந்து எங்கள் ஊரில் தர்ம தேவதை போல் இருந்து வந்ததால் இக்கடைசி மரியாதையை அவளுக்குச் செய்து முடிக்கிறோம்.'

கால்ட்வெல் மனம் எந்த நிலையில் அப்போது இருந்திருக்கும் என்பதை நேயர்கள் அறிவார்கள். ஓவெனக் கதறினான். அழுதான். முட்டிக்கொண்டான். அவனை அடையாளம் தெரியாததால் அவ்வூரார் அத்தரும தேவதையின் அருளைப் பெற்றவர்களில் இவனும் ஒருவன் போலும் என்று எண்ணினர்.

கால்ட்வெல் அழுத கண்ணுடனேயே முன் சென்று அச்சவப் பெட்டியைத் தூக்குவோருடன் சேர்ந்து கொண்டான்.

மாதாகோயிலில் சவப்பெட்டி இறக்கப்பட்டது. புதிதாக வந்த மனிதன் அதன் முன்னர் முழங்காலிட்டுப் பணிந்ததை யாவரும் கண்டனர். அதே சமயம் பல வருஷங்கள் மௌனம் சாதித்த அந்த மாயவாத்தியம் உயிர் பெற்று அருமையான கீதத்தை அள்ளிச்சொரிந்தது. மறுநிமிஷம்

புதிதாக வந்த மனிதன் தலை சாய்ந்தது.

சவச் சடங்கை நடத்த வந்த குரு அவன் யாரெனக் கண்டு கொண்டார். காதலரிருவரும் ஒன்ருக அடக்கம் செய்யப் பட்டனர். அந்தோ! பரிதாபம்!!

இகலோகத்தில் பிரிவுற்றவர் பரலோகத்தில் ஒன்று கூடினர் போலும்.

* * *

பெர்க்லி நகரத்தின் மாதா கோவிலில் இன்னமும் அவ்வாத்தியத்தைக் காணலாம். ஆனல் மேற்கூறிய சம்பவத்திற்குப் பின் அது மௌனமாகவே இருந்து வருகிறது.

ஏஜண்டுகளுக்கு.

அடுத்த வெளியீட்டில் தேவையுள்ள அதிகப்பிரதிகளைக் காலந்தாழ்ந்து தெரிவிப்பதால் அநுப்ப இயலாமல் போகிறது. ஆகவே ஒவ்வொரு ஆங்கில மாத முடிவிற்குள் பில் தொகையை அநுப்பி அடுத்த வெளியீட்டில் எவ்வளவு பிரதிகள் அதிகம் தேவை என்பதையும் தெரிவிக்கும்படி நமது ஏஜண்டுகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

—மானேஜர்.

கோபால ஔஷதாலயம்,
சீர்காழி.

பிரஸித்திபெற்ற ஸித்தௌஷதங்கள்.

ஸுகப்பிரஸவ ஔஷதம் :-

பிரஸவம் கவலைப்படாமலும், சாதாரண ஆகார வசதிகளுடனும், சரீர சௌக்கியத்திற்குமான வகையில் உள்ள ஓர் ஸித்தௌஷதம். அனேகம் ஊர்களில் எங்கள் ஸுகப்பிரஸவ ஔஷதமில்லாத பிரஸவங்களில்லை. வெகு பிரஸித்தம்.

கர்ப்ப சஞ்சீவி எண்ணெய் :-

Best uterine Tonic in Pregnency கர்ப்பிணிகளின் மலஜல கோளாருகளுக்கும் பலஹீனத்திற்கும்.

நவதாம்பரம்:- வாதரோகங்களுக்கும்

குருதாளகம் :- காசம், க்ஷயம் முதலிய வியாதிகளுக்கும்.

சுவர்ணபூபதி :- தங்கம் சேர்ந்த உயர்ந்த டானிக்கும்.

இன்னும் அனேக ஔஷதங்களுமுண்டு. 0—2—0 ஸ்டாம்பு அனுப்பி கேட்லாக் கேழ்க்கவும்.

Pro. Dr. T. M. **நாராயணஸாமி அய்யர்.**

வீடு வேட்டை

டி. வி. சுவாமிநாதன்

"கட்டினவனுக்கு ஒரு வீடு; கட்டாதவனுக்கு ஊர் முழுவதும் வீடு" என்ற பழமொழியைப் பகன்ற அந்தப் பண்டைய காலத்து ஆசாமியை என்னெதிரில் கொண்டு நிறுத்தினுல் சர்க்கரை வாங்குவதில் ஏற்படும் அவஸ்தைகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அந்த ஆசாமியின் வாய் நிறையச் சர்க்கரையைப் போட்டுவிடுவேன். அதற்கு என் சகதர்மிணி சம்மதியாவிட்டால் "ஆலையில்லா ஊருக்கு இலுப்பப்பூ சர்க்கரை" என்னும் இன்னொரு முதுமொழியை மனத்திற்கொண்டு இலுப்பப்பூவைப் போட்டு "பொன் வைக்கவேண்டிய இடத்தில் பூவாவது வைத்தோம்" என்ற திருப்தியையடைவேன். அந்த ஆசாமிக்கு இலுப்பப்பூ பிடிக்காது போலிருக்கிறது. அநேகமாக என்னிடமிருந்து இலுப்பப்பூவைத்தான் எதிர்பார்க்க முடியும் என்றோ என்னவோ அந்தப் பேர்வழி என் கண்ணில் படுவதேயில்லை.

நான் இந்த ஊருக்கு வந்து ஆறுமாதங்கள் கூட இன்னம் சரியாக முடியவில்லை. இந்த சொற்ப காலத்திற்குள் என் மனைவி சுசீலாவின் தூண்டுதலின் பேரில் சுமார் ஆறு வீடுகளில் வாசம் செய்துவிட்டேன். இந்த வீட்டில் காற்றடிக்கவில்லை, அந்த வீட்டில் மழை பெய்தால் ஒழுகுகிறது. மூன்றுவது வீட்டில் சமையற்கட்டில் புகை போக்கியில்லை, இன்னொரு வீட்டில் குழாயில் தண்ணீரே வருவதில்லை என்று ஏதாவது சொல்லி என்னை வீடு வீடாகத் தூரத்திக் கொண்டிருந்தாள் சுசீலா. இந்தக் குறைபாடுகள் ஒன்றுமில்லாவிட்டால் வீட்டுக்கார அம்மாளுடன் சண்டை இழுத்துவிட்டுக்கொண்டு "சண்டை வந்தது பிராமணு; சட்டியைத் தூக்கு" என்பாள்.

இதே சமாச்சாரந்தான் நான்கு நாட்களுக்குமுன் நான் ஆபீஸிலிருந்து திரும்பி வந்ததும் ஆயிற்று. நான் வந்ததும் சுசீலா புன்முறுவலுடன் என்னை வரவேற்று நல்ல காப்பியாகக் கொண்டு வந்து கொடுத்தாள். உடனேயே "இன்று ஒரு ஆபத்து நம்மை நிச்சயமாக எதிர்நோக்குகிறது" என்று அறிந்து கொண்டேன். ஆகவே அமுக்குப் பிள்ளையார்போல் வாயை மூடிக்கொண்டிருந்தேன்.

"என்ன! இந்த வீடும் சரிப்படாது போலிருக்கிறது" என்று அவள் கூறியவுடன் என்

உயிரே போய்விடும்போலிருந்தது.

"என்ன சொல்கிறாய்!" என்று பரிதாபகரமான குரலில் கேட்டேன்.

"வேறு வீடு பார்க்க வேண்டியதுதான்" என்றாள் சுசீலா.

"எதற்கு வேறு வீடு?"

"குடிப்போக"

"இந்த வீட்டிலேயே குடி இருந்தால் என்ன?" இந்தக் கேள்வியைக் கேட்டு முடித்தேனோ இல்லையோ "இந்த வீட்டில் என் சௌகரியத்தை யார் கவனிக்கிறார்கள்? நான் புகையில் கிடந்து திக்கு முக்காட வேண்டியதுதான். கிளியை வளர்த்துப் பூனையிடம் கொடுத்தாற் போல் என்னை எங்கப்பா உங்களுக்கு...." என்று சுசீலா பிரலாபிக்கத் தொடங்கிவிட்டாள்.

இனி வேறு வழி இல்லை என்று துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பினேன்—சந்நியாஸம் வாங்கிக் கொள்வதற்கல்ல; வீடு பார்க்கத்தான். "நல்லவேளை! நமக்குப் பூனைப்பட்டம் சூட்டியதோடு நின்றாளே. "குரங்கினிடம் பூமாலையைக் கொடுத்தாற்போல" என்று கூறி நம்மை வானரனுக்காதிருந்தாளே!" என்று 'களிபேருவகை' எய்தினேன்.

என் அதிர்ஷ்டம் (துரதிர்ஷ்டம் என்று பின்னால்தான் தெரியவந்தது) சிறிது தூரஞ் செல்வதற்குள்ளேயே ஒரு வீட்டு வாசலில் 'டு லெட்' என்று அட்டையில் எழுதித் தொங்க விடப்பட்டிருந்ததைக் கண்டேன். தூணில் எங்கேயாவது நாய் கட்டப்பட்டிருக்கிறதோ என்று முன் ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொண்டே உள்ளே நுழைந்தேன். கூடத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தவர் என்னை வரவேற்றார்.

"எங்கு வந்தீர்?" என்று வினவினார்.

"சும்மா வீட்டைப் பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன்" என்று பதிலளித்தேன்.

"ரொம்ப சந்தோஷம்" என்றார் அவர்.

"வீடு நன்றாக சௌகரியமாக இருக்கிறதோ இல்லையோ?" என்று நான் கேட்டேன்.

"இரவில் தூங்கும்போது மூக்கின்மேல் எலிகளும் பெருச்சாளிகளும் குதித்தோடுவது சௌகரியமா?" என்று பதில் கேள்வி பிறந்தது.

"காற்றடிக்குமோ இல்லையோ?"

"விசிறிக்கொண்டால் காற்று வரும்."

"குழாயில் தண்ணீர் தாராளமாக வருகிறதில்லையா?"

"சினிமா நடிகைகளின் கண்களிலிருந்து கண்ணீர் சிந்தும் வேகத்துடன் வரும்."

"மழை பெய்தால் சமையற்கட்டில் ஒழுகாதே?"

"சமையற்கட்டில் மாத்திரமல்ல. வீடு பூராவுமே ஒழுகும்."

ஆள் சரியான பைத்தியம் என்று முடிவு செய்துவிட்டேன். இல்லாவிடில் குடி புகுவதற்காக வீடு பார்க்க வந்திருக்கும் வேற்றுமனுஷனிடம் இப்படியா உரையாடுவார்? எதற்கும் வாடகையையும் கேட்டுப்பார்த்து விடலாமென "வாடகை என்ன?" என்று விசாரித்தேன்.

"இருபது ரூபாய்" என்ருர். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"என்ன? இருபதா!" என்றேன்.

"ஆமாமய்யா! 3840 சல்லிகள். 3839 சல்லிகள் கொடுத்தாற்கூட காரியம் நடைபெருது" என்ருர். எனக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. இருந்தாலும் அவர் கையில் இருந்த 'வாக்கிங் ஸ்டிக்'கை உத்தேசித்து வாயை மூடிக் கொண்டேன்.

"அவ்வளவு கொடுக்க இயலாது" என்றேன்.

"உம்மை யார் என்னிடம் வாடகை பேச அனுப்பியது?" என்ருர். எனக்குத் திகில் உண்டாயிற்று. "டு லெட் போர்டு" என்று மென்று விழுங்கினேன்.

"வீட்டுக்காரர். இன்னும் அந்த போர்டை எடுக்கவில்லையா?" என்ருர்.

"இல்லை—ஆமாம்" என்று உளறியடித்துக்கொண்டு ஓடி வந்துவிட்டேன்.

வீடு திரும்பி சுசீலாவிடம் எல்லாவற்றையும் விவரித்தேன். ஒரு காரியத்திற்குத் துப்பில்லை என்று வசவு கிடைத்தது. இதற்காகத்தான் பெரியவர்கள் ஸம்ஸாரம் சாகரம் துக்க என்ருர்கள். அவர்கள் வாயில்—சரி, சரி அதையே சொல்லிக் கொண்டிருக்கிறேனே! வேறு வீடு வாடகைக்கு இருக்கிறதா என்று பார்க்கப்போக வேண்டாமா?

—o—

"மிராசுதார்" மாதிரிப் பிரதி விரும்புகிறவர்கள் 0—4—9 தபால்தலைகள் அனுப்பிவைக்க வேண்டும்.

ஒன்று ஒன்பதாகுமோ?

வெ. சு. அருணன்

○

"ஒன்று ஒன்பதாகுமோ?" இது எதிர்பாராத விசித்திர மான கேள்விதான். ஒன்றைக் கொண்டு பின்னரும் எட்டு உற்பத்தி செய்ய முடியுமா? என்று வெளிப்படையாகக் கேட்கலாம். இது எதைக் குறித் துக் கேட்கப்படுகிறது என்று அன்பர்கள் வினவலாம். காம சாஸ்திர விற்பன்னர் ஒருவர் ஒரு ஸ்திரீ எட்டுக் குழந்தைகளைப் பெறுவதைத் தகுந்த உதாரண மாக நினைக்கிறார். இதை அவர் கூறும்போது அழுவதா சிரிப் பதா என்கிற நிலைமை ஏற்பட்டு விடும். இது ஒரு விகற்பமான தப்பர்த்தம் என்று நம்மால் கூறா மலிருக்கமுடியாது.

சுப்பண்ணாவின் பிரதம சிஷ் யன் ஒன்றை ஒன்பதாக்க ஒரு பூஜ்யமே போதும் என்று சொல்லுகிறான். ஒன்றின் அரு கில் பூஜ்யத்தை வைத்தால் பத் தல்லவோ ஆகும்? என்று ஐயுற லாம். அந்த குயுக்தியுள்ள சிஷ் யன் ஒன்றின் தலையில் ஒரு பூஜ் யத்தை சூட்டி ஒன்பதைக் கண்டு ஆச்சரியப்படுங்கள் என்று சொல்லுகிறான். இது குயுக்தியான ஒரு ஹாஸ்ய அர்த் தம் என்று நன்றாகத் தெரிகிறது.

எங்கள் எச்சுமுப் பாட்டியின் வாயில் சில சமயம் 'ஏண்டா ஒன்றை ஒன்பதாகச் சொல்லித் தொலைக்கிறாய்!' என்று சலிப் பான வார்த்தைகள் எழும். அவள் எந்த அர்த்தத்தில் இவ் வினவை விடுத்தாளோ அதே அர்த்தத்தில்தான் எனது கேள்வி யும் அமைந்திருக்கிறது. ஆட்டு மந்தை விவகாரத்தை முன் கொண்டது இக்கேள்வி.

எச்சுமுப் பாட்டியின் இல ட்சணமான பெயர் லட்சுமி. அவளிடம் மேற்கண்ட கேள்வி எழக் காரணகர்த்தா சோமு. சோமு பொய்யிலே பிறந்த சிறு வன். ஊசியைக் கண்டால் உலக்கையைக் கண்டதாகக் கூறுவான். குன்றை மடுவாக்கிப் பேசுவான். சோமு ஊசியை உலக்கையாகச் சொல்லும் போது 'ஒன்றை ஒன்பதாய்' சொல்வதாகக் கூறப்படுவது உலக வழக்கு. இலக்கியமாகக் கருதப்பட்டால் 'மிகைபடக் கூறல்' என்ற உத்தியின்கீழ் இது சேரும். ஓட்டாண்டியை மகிப னுக்கு ஒப்பிடுவதில் இவ்வுத்தி பயன்படும்.

அமெரிக்க நூல்களில் நட் பினர்களை சேகரிக்க வழி கூறும் போது ஒன்றை ஒன்பதாகச் சொல்லும் உத்தியை பெருமைப் படுத்திக் கூறப்பட்டுள்ளது.

'கழுதையைக் குதிரையென்று கூப்பிடு. அது இன்னமும் அதிக சுமை தாங்கும்' என்று மேனாட்டு நூல்களில் காணப் படுகிறது. கழுதையைக் குதிரை யென்று கூப்பிட்டால் பார்ப்ப வன் சிரிப்பானே என்று கேட் கப் போனால் "அதைக் கேட்க யாரிருக்கிறார்கள்? அதைக் குதிரை யென்றே எல்லோரும் உறுதிப்படுத்தி விடுவார்கள். இதுதான் ஆட்டுமந்தை விவகா ரம் எனப்படுவது' என்று பதிலளிக்கப்படுகிறது.

பழங்காலத்துக் கதையொ ன்று உண்டு. ஒருநாள் காலை யில் ராஜவீதியில் "ஐயோ! என் பிரிய ரஹ்மான் இறந்தான னே!" என்று ஒரு வண்ணான் அழுதுகொண்டே போனான். அவனது உறவினரும் மனமிள கிய இன்னும் சிலரும் கதறி அழுதார்கள். நாட்டு விதிப்படி மன்னவன் முதலாக எல்லாரும் மூன்றுநாள் சடங்குகளை அனு சரித்தார்கள். மூன்றாம் நாள் மாலையில் மன்னவன் 'இந்த ரஹ்மான் யார்?' என்று கேட் டானாம். யாராலுமே பதிலளிக்க முடியவில்லை. கடைசியாக வண்ணான் கொண்டுவந்து நிறுத்தப்பட் டான். அவனைநோக்கி 'இந்தப் பிரிய ரஹ்மான் யார்? சொல் வாயாக!' என்று மன்னவன் கட்டளையிட்டான். 'சுல்தானே! இந்தப் பிரிவை எப்படி சகிப் பேன்! நான் என்ன செய்வேன்! அவ்வளவு துணிகளைச் சுமக்கக் கூடிய ரஹ்மான் இறந்தானே!' என்று வண்ணான் புலம்பினான். 'அழாதே மகனே! விதியாரை விடும்!' என்று சுல்தான் தேறு தல் சொன்னான். 'சுல்தானே! அதைப்போன்ற கழுதை இனி எவ்வளவு விலை கொடுத்தாலும் கிடைக்காதே!' என்றான் வண் ணான். அப்பொழுதுதான் வண் ணானின் கழுதையின் பெயர் ரஹ்மான் என்பதும், அக்கழு தை தான் இறந்தது என்றும் தெரியவந்தது. மன்னவன் முத லாக எல்லோரும் வெட்கித் தலை குனிய வேண்டிய நிலைமை ஏற் பட்டு விட்டது. இங்கே வேண்டுமென்றே வண்ணான் 'ஒன்றை ஒன்பதாக'ச் சொல்ல வில்லை.

இயற்கையின் போக்கிலே கூட 'ஒன்றை ஒன்பதாக்குதல்' பரவியிருத்தலை நாம் அறிய முடிகிறது. தினசரி உலகமே பெருகி வருகிறது. பத்திரிகாசிரி யர்களும் எழுத்தாளர்களும் ஒன்றை ஒன்பதாகச் சொல்லிப் பத்திரிகையின் விற்பனையையும் ஒன்பதாக்குகிறார்கள்.

'இந்தக் கூர்மையான விவ காரம் எங்கும் இருக்கிறது' என்றுதான் முடிவு கூறவேண்டி இருக்கிறது.

விநோத அரசியல்

அ. சீனிவாசன்

*

சாரமதி நாட்டு வாசிகள் இருபதினுயிரம் பேர். அந்த தேசத்திற்கு ஒரு அரசனுண்டு. அவனுக்கும் மற்ற அரசர்களைப் போல் மந்திரிகள் உண்டு. படைகள் உண்டு. ஆனுல் மொத்த சிப்பாய்கள் 50 பேர்தான். இருந்தாலும் படை படை தானே? நீதிஸ்தலம் உண்டு. ஆனுல் 'வக்கீல்கள்' என்று சொல்லப்படுகிறவர்கள் இருக்கிருர்களே, அவர்கள் மட்டும் கிடையாது. 'ஜெயில்' உண்டு. ஆனுல் அது ஒரு சிறிய அறைதான். அறைக்குத் தாழ்ப்பாள் கிடையாது.

அங்கும் வரிகள் உண்டு. ஆனுல் அந்தப்பணம் பொக்கிஷத்துக்குப் போதுவதில்லை. ஆகையால் அங்கு நூதன வரி ஒன்று இருக்கிறது. அது தான் முட்டாள் வரி. யாராவது முட்டாள் என்று நிரூபிக்கப்பட்டால் அவன் இந்த வரி தரவேண்டியதாக ஏற்படும். இந்த வரியினுல் அங்கு முட்டாள் என்ற பட்டத்துக்கு ஆள் கிடைக்கவில்லை என்பது கடைசியான வதந்தி.

திடீரென அங்கு ஒரு விசேஷம் நிகழுகிறது. அது அந்த நாட்டில் பரபரப்பையும் ஆச்சரியத்தையும் உண்டாக்குகிறது. அது என்னவென்ருல், ஒரு கொலை நடந்துவிட்டது. குற்றவாளியும் பிடிபட்டான். நீதிஸ்தலத்தில் விசாரணை செய்தார்கள். அவன், தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொள்ள நேரிட்டது. ஆகையால் நீதிபதி மரணதண்டனை விதித்தார்.

நீதிபதி தண்டனை விதித்து விட்டார்; ஆனுல் அதை நடத்தி வைப்பவர் யார்? அங்கு யாரையும் கொலை செய்வதற்க்கென்று சம்பளம் கொடுத்து வைக்கவில்லை. ஆகையால் ஒரு நெருக்கடியான சந்தர்ப்பம் நேரிட்டது. மன்னன் மந்திரிகளை அழைத்து ஆலோசனை செய்தான். கடைசியாக எல்லோரும் ஒரு முடிவுக்கு வந்தனர். பக்கத்திலுள்ள நம் நாட்டுக்கு ஒரு கொலையாளியை அனுப்பிவைக்கும்படி விண்ணப்பம் செய்தனர். நம் நாட்டினர் அனுப்பத் தயாராய்த் தான் இருந்தனர். ஆனுல் அதற்கு 5000 ரூபாய் செலவு ஆகும் என்று பதில் தந்தனர். ஆனுல் சாருமதி நாட்டின் வரும்படியே 5000 தானே!

இந்தப்பதில் வந்ததும் மறுபடியும் மந்திரிகளின் ஆலோசனை நடந்தது. 5000 ரூபாய் தருவது

என்பது முடியாத செயல் எனத் தீர்மானித்தனர். ஆதலால் மகத நாட்டுக்கு விண்ணப்பம் செய்தனர். ஆனால் அவர்களோ பதினாயிரம் ரூபாய் வேண்டுமென்று சொல்லி விட்டார்கள்!

மறுபடியும் சபை கூடிக் கார சாரமாக வாதித்துக் கடைசியாக மரண தண்டனையை ஜன்மமாக குறைத்துக் காவலில் வைத்துவிடுவதென்ற முடிவு செய்தனர்.

ஆனால் அவனைச் சிறையில் வைக்கச் சிறை வேண்டுமே! முன்புசொன்னபடி தாழ்ப்பாள் இல்லாத அறை ஒன்றுதான் இருந்தது. ஆகையால் காவலுக்கு ஒரு ஜவானை நியமித்தார்கள். எல்லாம் ஒரு வழியாக முடிந்தது.

வருடமும் ஒன்று கழிந்தது. அரசனுக்கு அவனுடைய வருடாந்திர வரவு செலவு 'பட்ஜெட்' வந்தது. அதில் புதிதாக ஒரு அம்சம் இருந்தது. அது இதுதான்: ஜன்மக் கைதியின் செலவு. அதற்கு 950 ரூபாய் ஒதுக்கப் பட்டிருந்தது! அந்த கைதியின் வயதோ இருபத்து ஐந்துதான். அவன் இன்னும் குறைந்தது 50 வருடங்கள் உயிருடன் இருப்பான். அப்பொழுது செலவு என்ன ஆகிறது பாருங்கள்!மன்னவனுக்குப் பகீரென்றது. இந்தச்செலவுக்கு புதிய வரி போட்டாலன்றிச் சமாளிக்க முடியாது. ஆனால் புதியவரிகள் போட மன்னனுக்குப் பிடிக்கவில்லை.

ஆகையால் பழையபடி மந்திரிகள் கூடிப் பின்வருமாறு முடிவு செய்தனர். அதாவது காவலாளை எடுத்துவிடுவதென்றும் கதவை மூடுவதில்லையென்றும் தீர்மானித்தனர். இப்படிச் செய்வதால் அவன் தப்பித்து ஓடிவிடுவான் என்று எண்ணினர்.

மாதம் ஆறுயிற்று. ஆனால் அவர்கள் எண்ணியபடி ஒன்றும் நடக்கவில்லை. அவன் தப்பித்துப் போவதற்குக் கிஞ்சித்தேனும் முயற்சிக்கவில்லை.

கடைசியாக அவனை நேரடியாக அழைத்து ஓடி விடும்படிக் கூறினர். அதற்கு அவன் பின் வருமாறு விடை கூறினான்:

"நான் கொலை செய்தது உண்மை. நீங்கள் எனக்கு மரண தண்டனை விதித்தீர்கள். அது அநியாயம். இருந்தாலும் சட்டத்திற்குக் கீழ்ப் படிந்தேன். என்னை நீங்கள் கொலை செய்யாமல் இருந்து விட்டீர்கள். அதற்காகவும் நான் வருந்தவில்லை. அதன் பின் எனக்குக் காவலிருந்த ஜவானையும் எடுத்து விட்டீர்கள். என்னுடைய சாப்பாட்டையெல்லாம் நானே பரிமாறிக் கொள்ள வேண்டியிருந்தது. அப் பொழுதும் நான் வருத்தப் படவில்லை. ஆனால் நீங்கள்

இப்பொழுது சிறையை விட்டுப் போகச் சொல்லுகிறீர்கள். இது என்னால் முடியாத காரியம். நான் சிறையில் என் தொழிலை மறந்து விட்டேன். அது தவிர என் நாட்டார்களெல்லாம் என்னைக் கேவலமாக நடத்துவார்கள். அதை என்னால் சகிக்க முடியாது. ஆகையால் நான் கண்டிப்பாகச் சிறையில்தான் இருப்பேன்" என்றான்.

இதைக் கேட்ட மந்திரிகளுக்குத் தலையில் இடி விழுந்தாற் போல் இருந்தது. கடைசியாக அவனுக்கு மாதம் 25 ரூபாய் தந்து அவனை விட்டு விடுவது என்ற முடிவுக்கு வந்தனர்.

அவன் அழகிய தோட்டம் ஒன்றின் மத்தியில் ஒரு குடிசையில் வசித்தான். மாதம் முதல் தேதியானதும் 25 ரூபாய்க்கு செக்கு வந்துவிடும் அவனுக்கு.

அறிவிப்பு.

நமது காரியாலயத்துக்குச் சேரவேண்டிய தொகைக்காக அன்பர்கள் செக், போஸ்டல் ஆர்டர் முதலியவைகளை அனுப்பிவைப்பதால் அவைகளை மாற்றுவதில் அனாவசியமாகக் காலதாமதமும், கமிஷன் முதலிய வீண் செலவுகளும் ஏற்படுகின்றன. ஆகவே தொகையை மணியார்டர் மூலமாகவே அநுப்பி வைக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். சந்தர்ப்பங்களை அநுசரித்து மணியார்டர் செய்ய வசதியின்றி மற்ற வகைகளில் தொகையை அநுப்பிவைப்பவர்கள் கமிஷன் செலவுக்கும் சேர்த்தநுப்பக் கோருகிறோம்.

மானேஜர்.

பைத்தியம் பிடித்தால் !



சாகித்தியகர்த்தா :	ஸ்வரப்படுத்தியவர் : சங்கீத பூஷணம்
ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள்	**பி. வி. கணேசய்யர்**

"எவருரா"

மோகன ராகம் — த்ரிபுடதாளம்

பல்லவி

எவருரா நின்னுவினு கதிமாகு (எ)

அனுபல்லவி

ஸவரக்ஷகா நித்யோத்ஸவஸீதாபதி (எ)

சரணம்

ராஜாபிகுவு நீகேலரா ?
தியாகராஜார்ச்சித தாள ஜாலரா—ராமா
ஈ ஜாலமுலேய ராஜப்ரோவ
ஸம்கோசமா ஸுராபூஜமாமாகு (எ)

ஆரோஹணம் ஸரிகபதஸ் } 28-வது மேளகர்த்தா ஹரிகாம்
அவரோஹணம் ஸ்தபகரிஸ } போஜியில் ஜன்யம்.

அந்தர காந்தாரமும், சதுஸ்ருதி தைவதமும் இந்த ராகத்தின் ஜீவஸ்வரங்கள். ஔடவ, ஔடவ ராகம். (ஆனால்இந்த ராகத்தை ஸுப்பராம தீக்ஷிதர் மேசகல்யாணியின் ஜன்யமென்று விவரித்திருக்கிறார்) இந்த ராகத்தில் ம நி வர்ஜஸ்வரம். ஒரு ராகத்திற்கு மத்தியமம் வர்ஜஸ்வரமாக இருந்தால் அந்த ராகம் சுத்த மத்திமம் உள்ள தாய் ராகத்திலிருந்துதான் ஜனிக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. நாளடைவில் வழக்கத்திலுமிருந்து வருகிறது.

அடியில் காணும் அடையாள விவரம்

- , இது ஒரு மாத்திரை காலம்.
- ; இது இரண்டு மாத்திரை காலம்.
- | இது தாளத்தின் உள்ளங்கம்.
- || இது தாள ஆவர்த்தத்தின் முடிவு.
- — இது மத்தியம காலத்தைக் குறிக்கும்.
- · இந்தப்புள்ளி ஸ்வரத்தின் கீழ் இருந்தால் மந்திர ஸ்தாயியையும், மேலிருந்தால் உச்ச ஸ்தாயியையும் குறிக்கும்.
- * இது தாளத்தில் கீர்த்தனத்தை ஆரம்பிக்கும் இடத்தைக் குறிக்கும்.
- ~~~ இது கமகமாகப் பாடவேண்டியதைக் குறிக்கும்.

ஸ்வர ஸாஹித்யம்

பல்லவி

(1) க பா | த ஸ்ஸ | ஸ்ஸா || த ஸ்ஸா | த ப | தா ||

எ வ | ரு . | ரா || நின் னு | வி . | ஞ ||

, க க | த ப | தா || க த ப | க ரி | ஸரிகரி ||

, க . . | தி . | . || மா : . | கு . | . . . ||

(2) கபத | ஸ்ஸரிக்ரி | ஸ்ஸா || தரிஸ்ஸ | தப | தா ||

எவ . | ரு . . . | ரா || நின் னு | வி . | ஞ ||

; பக | பதஸ்ஸா | ஸ்ஸா || ஸ்ரிஸ்ஸ்தா | தஸ்தப | கரிஸரி ||

; க . | தி . . | . . || மா . . . . . | கு . . . | . . . . || (எ)

அனுபல்லவி

(1) ஸ்ஸ்ரி | க்ரா | ரீ || ஸ்ஸ்ரி | ஸ்ரி | ஸ்ஸா ||

ஸ வ . | ர | க்ஷ || கா . . | நி த் | யோ ||

த ரி ஸ் | ஸ்ஸா | ஸ்ஸா || த ஸ் ஸ் | த ப | தா ||

த் ஸ . . | வ | ஸீ || தா . . | ப . | தி ||

(2) ஸ் ரி க்ரா; | க்ப் | க்ரி || ஸ்ரிக்ரிக்ரி | ஸ்ரிக்ரி | ஸ்ஸா ||

ஸ . வ | ர . | க்ஷ. || கா . . . . . | நி . . த் | யோ ||

த க் ரி | ஸ் ா | ஸ்ஸா || ஸ்ரிஸ்ஸ்தா | தஸ்தப | கரிஸரி ||

த்ஸ . . | வ | ஸீ || தா . . . . | ப . . . | தி . . . || (எ)

சரணம்

ஸரீ |	க ரி |	கா ||	கரீ |	க க |	பா ||
ரா . |	ஜா . |	. ||	பி கு |	. . |	. ||
க க க |	த ப |	தா ||	க த ப |	கரி |	ஸா ||
நீ . |	கே . |	ல ||	ரா . . |	த்யா |	க ||
ஸஸரி |	க ரி |	கா ||	க க ப |	கரி |	ரீ ||
ரா . . |	ஜா . |	ர் ||	ச்சித |	தா . |	ள ||
க த ப |	க ரி |	ஸா ||	ஸஸத |	ஸரி |	கா ||
ஜா . . |	ல . |	. ||	ரா . . |	ரா . |	மா ||
பதா |	**ஸ்ா** |	ஸா ||	**ஸ்ஸ்ரி** |	க்ரி |	க்ா ||
ஈ . |	ஜா |	ல ||	வமு . |	**ஸே** . |	ய ||
க் ரி |	க் ரி |	ஸ்ா ||	**தஸ்ஸ்** |	தப |	தா ||
ரா . |	. . |	ஜ ||	ப்ரோ . |	வ |	**ஸ்ம்** ||
த த ரி |	**ஸ்ா** |	**ஸ்ா** ||	**தஸ்ஸ்** |	த ப |	தா ||
கோ . . |	ச |	மா ||	**ஸ ஒ** . . |	ர . |	பூ ||
ப ப த |	ரி ரி |	ஸ்ா ||	**ஸ்ரிஸ்ஸ்**தா |	தஸ்தப |	கரிஸரி ||
ஜ . . |	மா . |	. ||	மா . . . . |	கு . . . |	. . . . || (எவருரா)

முதலுக்கே மோசம்!



சீதோஷ்ணமும் ஆரோக்கிய விதிகளும்.

வைத்திய பூபதி டி. எம். நாராயணசாமி அய்யர்

நமது பரதகண்டம் ஹிமோத்கிரி முதல் கன்யாகுமரி வரையில் பரவியுள்ள ஒரு பூப்பிரதேசமாகும். இதில் சமுத்திரமட்டத்திற்குச் சற்று அதிகமான உயரத்தில் கடலோரமாகவுள்ள பிரதேசங்களும் சமுத்திரத்தின் நீர் மட்டத்திற்கு அதிக உயரமான இடங்களாலுமாகியது. நமது தேசத்தில் மலைச்சாரல் களிலிருந்து உண்டாகி சமுத்திர காமியாகும் நதிகளின் கதி உயரமான இடத்திலிருந்து வரவரக் குறையும் பூப்பிரதேசத்தில் ஜலம் ஓடக்கூடிய மட்டத்தில் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கி அங்கங்கும் ஜலத்தேக்கங்களையும், அவைகளால் நீர்ப்பாசனவசதி, பூமி நல்வாய்ப்பட நேருவதால் பண்படுத்தப்பட்டு ஆங்காங்கு நிலபுலங்களும் மற்றும் பயிர் பச்சைகளுமாகக் காணப்படுகின்றது. இதில் மேற்கு சமுத்திரத்தில் சில நதிகளும் கிழக்கு சமுத்திரத்தில் சில நதிகளும் வந்து கலக்கின்றன. தவிர வடக்கே ஹிமாசலம் என்னும் மகா பர்வதத்திலிருந்து பனி உருகி ஜலமாக வந்து சமுத்திரத்தில் கலக்கும் சில நதிகளுமுண்டு. இவைகளில் பெரிய நதிகளான கங்கை, பிரம்மபுத்ரா, ஸிந்து என்ற நதிகள் ஹிமாலய பர்வத பனிக்கட்டி உருகி வருவதை ஆதாரமாகவும், விந்தியத்திற்கு, தெற்கிலுள்ள, நர்மதா, தப்தி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி முதலியநதிகள் (மான்சூன்) வடமேற்கு, தென்கிழக்கு மான்சூன்களை ஆதாரமாகக்கொண்டு மழை பெய்து மலைகளில் ஜலம் வழிந்தோடி ஒவ்வொரு இடங்களின் பூமி மட்டத்தை ஆதாரமாகக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக இறங்கி சமுத்திரத்தை அடைகின்றது. ஆகையால் நமது பரதகண்டத்தின் இயற்கை அமைப்பில் விந்தியத்திற்கு தெற்கேயுள்ள பிரதேசங்களுக்கு கிழக்கு மேற்குத்தொடர்ச்சி மலைகளையும் அதில் பெய்யும் மான்சூன் மழை ஜலத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளதும், ஹிமோத்கிரியில் உற்பத்தியாகி அநேக ஆயிரக் கணக்கானமைல் தூரம் பிரவாகித்து ஸமுத்திரத்தில் சேரும்நதி தீரங்களுமே யாகும்.

நதிதீரங்கள் புரம்பாகவோ சமீபத்தில் நூற்றுக்கணக்கான மைல்களில் ஜலவசதியில்லாத பிரதேசம் மத்ய மாகாணமேயாகும். அது வெறும்பொட்டல் பூமியாகவுள்ளது. இவ்வகைப்பட்ட பூப் பிரதேசத்தில் சமுத்திரமட்டத்திற்கு அதிக உயரமும், மட்டமுமான பிரதேசங்களில் வாழும் ஜனங்கள் அநேகம் கொள்கைகளையும், ஜீவாதாரங்களையும் பலவகைப்பட்ட வாழுந்துறைகளையும் உடையவர்களாக இருப்பவர்கள். மலைப் பிராந்தியங்களின் உயர்ந்த இடங்களின்

சீதோஷ்ணங்களுக்கு, அதில் பழக்கமாக ஜீவித்துவரும் ஜனங்களின் சரீர சுபாவம், பழக்க வழக்கங்கள், ஆகார அனுஷ்டானங்கள் இவைவுக்கும் மற்றும் அதற்கு சமீபமாகவுள்ள தாழ்ந்த பிரதேசங்களில் வசிக்கும் ஜனங்களின் பழக்க வழக்கங்களுக்கும் வித்தியாசங்கள் இராமலில்லை. இவைகள் தவிர ஜனங்களின் சௌக்கியநிலைமைகளைப் பாதுகாக்க வேண்டிய கடமையிலுள்ள காருண்ய கடவுள் அங்கங்கும் ஜனங்களுக்கு வேண்டியவைகளும், உதவக்கூடியவைகளும் உற்பத்தி செய்து அவைகளால் ஜனங்கள் சௌக்கியமாய் வாழும் வகையில் பதார்த்தங்களை உற்பத்திசெய்து, தகுந்த விளைவையும் விளைப்பொருள்களில் நானுவிதங்களையும், உற்பத்தி செயதிருக்கிறார். எந்த எங்க சீதோஷ்ணத்தில் எந்த எந்த விளைபொருள்கள் உண்டாகின்றனவோ அவைகள் உபயோகிக்கத் தகுந்தவைகளே யாகும். ஆரோக்கியமான உணவுபொருள்களுமாயாகும்.

இவ்விதம் சீதோஷ்ண மாறுதல்களுக்கு சமுத்திரமட்டம் — அதிக உயரம் இவைகள் காரணமாக இருக்கும் வகை தவிர பூமத்தியரேகை எனும் சீதோஷ்ணவேகத்தில் உஷ்ணத்தை சூரியனின் கதி என்னும் ஒரு ரேகை சூர்ய உஷ்ணத்தை எந்த அளவில் ஒவ்வொரு தேசத்தை நெருங்குகின்றதென்றும், அதனல் சீதோஷ்ண கூடுதல் குறைவுகள் அனுபவிக்கக்கூடிய அளவிலும், கடுமையாய் காட்டாத வகையிலும் உண்டாக்கும் சக்தியுள்ள இம்மத்திய ரேகையின் கதி விசேஷத்தால் சீதோஷ்ணங்கள் பாதிக்கப்படும். மான்சூன் மழைகள் முதலியவைகளுக்கு ஆதாரமாக சூர்யகதி நிற்கின்ற வகைகளும் இருக்கின்றன. சீதோஷ்ணத்தை எவ்வளவு மழையிலும் உயரம் மட்டம் என்ற வகையிலும் கூடுதல் குறைவு செய்யும் சக்தியுமுள்ள சூர்யகதியாகின்ற ஓர் அக்னிரேகை பூமத்தியில் இருக்கின்றது. அதன் சமீபத்திலும் ஒட்டியிருத்தலும்கூட சீதோஷ்ணங்களை சுபாவ நிலைமைக்கு கொஞ்சம் அதிகம் குறைவு என்ற வகையிலும் உண்டாக்கும் வேகமான ஓர் அங்கமாகும். ஆகையால் ஒரு தேசத்தின் சீதோஷ்ணங்களை நிர்ணயிக்க பூமி மட்டம் உயரம், மலைகளுள்ளது, பொட்டல் வெளிகளுள்ளது — நீர் தாழ்ந்ததாகவுள்ளது—ஜலம் வெகு ஆழத்தில்உள்ளது-என்ற வகைப்பிரதேசங்களும்பூசாரம் விளைவுபொருள்களில் என்ன என்ன ஜீவசத்துக்கள் உற்பத்திசெய்யவல்லதும் விருத்தி செய்யக்கூடியதுமான வசதிகளில் பிரதேசங்களும் உள்ளதாகவும்—பூமி சத்துக்களில் உப்புசத்துக்கள் — உலோக சத்துக்கள்—தைலசத்துக்கள்—உள்ளதும், வேறும் வரட்சியாக உள்ளதும், சத்துக்கள் எவ்வகையிலும் இருப்பதும் இல்லாததுமான பூப்பிரதேசங்களை உடையனவாகவே இருக்கக் காண்கிறோம். குளிர்ந்த உஷ்ண பிரதேசங்கள் சூர்யகதியின் ஆதிக்கத்திற்கு அனுகுணமாக இருக்கத்தான் இடந்தருகின்றது.

ஆகையால் ஆரோக்கியமான நிலைமையை புதிதாய் உண்டுபண்ணும் வகைகள் நமக்கு அநேகம் தெரிந்திருப்பினும் ஒரு ஜாதியாரோ அல்லது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் ஜன சமூகத்தினரோ தொன்று தொட்டு அநுபவித்து சீதோஷ்ணங்களின் பலா பலன்களை வெகு தலைமுறைகளாய் அநுபவித்து ஸித்தாந்தப்படுத்திய வழிகள் எவை எவைகள் உண்டோ அவைகள் அநுஷ்டிக்கத் தகுந்தவைகள் என்றே முடிவுசெய்துவிடலாம்.

நமது பிரதேசத்தில் ஸ்நான பானங்கள் — அப்யங்கனம் நோயணுகா விதிகள் ஆகாரம் மற்ற பழக்கங்கள் என்ற இவைகளை பின் பற்றுதல் அவசியமேயாகும். தென் இந்தியாவில் சில பிரதேசங்களில் வேப்பம் எண்ணெய் ஸ்நானம் செய்யும் ஜனங்களும் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் இவைகளை ஸ்நானம் செய்யும் முறைகளையும் அதில் வங்காளக்குடாக்கடல் சமீபமாக உள்ள ஜனங்கள் நல்லெண்ணெய் ஸ்நானத்தையும், மேல் சமுத்திரக்கரையிலுள்ள ஜனங்கள் தேங்காய் எண்ணெய் ஸ்நானத்தை அப்யஸித்து அனுஷ்டானத்தில் கைக்கொண்டிருக்கும் முறையும் ஆரோக்கியமான முறைகளென்றேதான் கருதிக்கொண்டு நடத்தவேண்டும். கடப்பை, கர்னூல் முதலிய ஜில்லாக்களில் உள்ள ஜனங்கள் விளக்கெண்ணெய் ஸ்நானம் செய்கிறார்கள். அதற்குக் காரணம் எப்பொழுதும் மலைச்சாரலின் காங்கையால் அனல் வீசுகின்ற வகையிலேயே சீதோஷ்ண மிருப்பதுடன் பூமியில் ஜலம் சுண்ணம்பு சத்துக்களும் இன்னும் இதர சத்துக்கள் விசேஷமாக உள்ளதன் காரணத்தால், சீத வீர்யமான தைலம் ஆமணக்கு, நெய் ஸ்நானம் மதிப்பைப் பெறும். இன்னும் ஜலக்கெடுதலுள்ளதும் (Fileria) என்னும் வியாதிகளுக்காதாரமுமான வெகுகால மூலிகைகள் அழுகல் மடித்தல் என்ற வகையில் பூமிசாரம் உள்ள (Calcutta) முதலிய பிரதேசங்களில் கடுகெண்ணெய் ஸ்நானம் செய்கின்றதும் உசிதமானதென்றுதான் கொள்ளவேண்டும். ஆகையால் சீதோஷ்ணங்களின் தன்மைக்கும் பூமிசாரம் மற்ற அநுகுணமான இதர காரணங்கள் ஆதாரமாகவே பழக்க வழக்கங்கள் வெகுகால அநுபவத்தின் கீழ் உண்டுபண்ணப் பட்டிருக்கின்றன. ஆரோக்கியத்தை காப்பாற்ற வேண்டிய அவசியத்தில் இந்தியா தவிர மற்ற தேசங்களில் அப்யங்கனம் விசேஷமான மதிப்பைப் பெற்றிருக்கின்றதாக இல்லை. இவ்விதமாய் நமது வைத்திய கிரந்தங்களில் ஆரோக்கிய விதிகளும் நோயணுகா விதிகளும் அதற்கான காரணங்களும் தேரையர் முதலிய திருகால ஞானிகளால் சொல்லப் பட்டு ஜனங்களின் க்ஷேமார்த்தமாக நோயணுகா விதிகள் என்ற பகுதியும் எவ்வகையிலிருக்கவேண்டுமென்னும் கொள்கைகளை வெளியிட்டிருக்கிறார்கள். அப்யங்கனம் என்னும் விஷயம் மட்டுமே இன்று விவரிக்கப்பட்டிருக்கிறது. மற்றவைகளின் கோட்பாடுகள் வெளிவரும். அப்யங்கனம் உபயோகம் அடியிற்கண்டவாறுணர்க.

தலை முழுக்கால், சென்னி முழுந்தாள் இவைக்கு நீங்கா பலமுண்டாம். கேசம் படரும். தலைநோய் போம். பஞ்சேந்திரியம் பலத்து தெளிவையுறும். எஞ்சாதொனிபத மெழும்எண்.

தைலத்தை பாதம் முதல் கேச பரியந்தம் தாராளமான அளவில் தடவிக் கொள்வதால் மயிர்கால்கள் வழியால் அது உள்ளுக்கு சென்று அவயவங்களிலுள்ள மற்ற மார்க்கங்கள் வழியாகவும் தோலுக்கு சமீபத்திலுள்ள கோளங்கள், கிரந்திகள், நரம்புகள் இவைகளுக்கு ஓர் உணர்ச்சியை உண்டு பண்ணும் வகையில் முதலில் உஷ்ணப்படுத்தி அதன் ஹினிக்த சுபாவத்தால் மேற்கண்ட நாடி நரம்புகளுக்கும், கோளங்கள் கிரந்திகள் இவைகளுக்குப்புஷ்டியையும் உஷ்ணவீர்யசுபாவத்தால் வியர்வை மூலமாயும் துஷ்யங்களை வெளிப்படுத்தி மற்றும் உணர்ச்சி

நாம்புகளுக்கு உற்சாகத்தை தருவ தால் திடத்தையும் உண்டுபண்ணி மூளைக்கும் கண்களின் நரம்புஸ்தா னங்களுக்கும் தீர்க்கத்தை யுண்டு பண்ணுகின்றது.

தோலுக்கு பதமாக இருக்கும் வகையில் எண்ணெய் தடவி அதன் உபயோகத்தை எதிர்பார்ப்பது போல் உடம்புக்கு சீதோஷ்ண கெடு தல்களாலும் மற்ற வகைகளால் உண் டாகும் சோர்வுக்கும் இடந்தராமல் திடத்தை உண்டுபண்ணும் ஓர் அவ சியமான பிரயோகமாகும். தைல ஸ்நானத்தின் பொது உபயோகம் மேற்கொண்ட சில குறிப்புக்களால் உணர்வதுடன் எண்ணெய் வகை களில் பழக்கமாக சிலவைகளை குறிப் பிட்ட சில பிரதேசத்தினர்மட்டும் உபயோகப்படுத்தும் கொள்கையில் சுகாதாரத்திற்கான சில உண்மை களுண்டு. எண்ணெய் வகைகள் எல்லாவற்றிலும் கொழுப்பும் தாவ ரப் பொருள்களின் இயற்கை யால் நரம்புஸ்தானங்களுக்கு உத்ஸாகத்தை உண்டுபண்ணும். தாதுப்பொருள்களும் கொழுப்பின் சீதவீர்ய சுபாவத்தால் வேகங்களை சமனப்படுத்தும் சுபாவமுள்ள ஸத் துப் பொருள்களும் வித்துக்களின் தன்மைக்கு தகுந்தவாறு எல்லா எண்ணெய் வகைகளிலும் உண்டு.

சர்வாங்கங்களிலும் எண்ணெய் தடவுவதால் ஏககாலத்தில் உஷ்ண வீர்யமும் சீத வீர்யமுமான சுபாவ முள்ள தைல வகைகளின் ஸ்நானத் தால் நரம்பு ஸ்தானங்களுக்கும் மூளைக்கும் இந்திரிய கோசங்களுக் கும் திடத்தையுண்டாக்கும். கண் டத்துவனியை காம்பீர்யமாகவும் சுத்தமாகவும் காப்பாற்றும் குண முண்டு. நமது தென்னிந்தியாவின் சீதோஷ்ணத்தில் நல்லெண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல் சில அம்சங் களில் பொருத்தமானதுதான். நல் லெண்ணெய்க்கு கேசத்தை வளரச் செய்யும் குணமும், கண் பார்வை நரம்புகளுக்கு திடத்தைக் கொடுக் கும் வகையாலுமே பெருமைப்பட் டிருக்கின்றது. உயிருடன் வாழ எண்ணமுள்ளவனும், திடசித்த விருத்தியுள்ளவனும், நோயில்லாமல் சரீரத்தைக் காப்பாற்ற எண்ணமுள் ளவர்களாகவுள்ளயாவரும்மனுதர்மம் எப்படி என்றம், உஷ்ண வீர்யம் அதிகமாயுள்ள நமது பிரதேசத்தில் நாம்புத் தளர்ச்சி அதிக தாபத்தால் உண்டாவது இயற்கையாகையாலும் அதிலும் கண் சம்பந்தமான நரம்பு ஸ்தானங்கள் வெளிச்சமானதும் காலவகை உள்ளதுமான சூர்ய ரச் மிகளை ஒவ்வொரு நாளும் அநுபவித் தால் நேத்திரத்தின் நரம்புகளுக்கு மெலினம் ஏற்படுவதைக்கண்டு அவை களுக்கு திடம் கொடுத்துக்கொண்டு வரும் வகையில்தான் நல்லெண் ணெய் அனுஷ்டானத்தில் வழங்கு கின்றது. தென்னிந்திய ஜனங்க ளுக்கு கேசம் பிரதானமாக சீதோஷ் ணக் கெடுதலால் மூளை, கால், கை கொள்ளாமலிருப்பதற்கும், தலை மயிர்கள் மூளைக்கு பந்தோபஸ்தாயும் மயிருக்கு மதிப்புக்கொடுத்து நல் லெண்ணெய் உண்டுபண்ணி அப்யங் கனம் அனுஷ்டானத்தில் இருக்கின் றது.

நல்லெண்ணெய் ஸ்நானத்திற்கு சில ஆக்ஷேபணைகள் சொல்பவர்களு முண்டு. அவைகளுக்குள் நமக்கு சீதோஷ்ணத்திற்கு கபால கொதிப்பு நரம்பு ஸ்தானங்களின் பலஹீனம் நேத்ரம் பார்வை கம்முதல் இக் குணங்கள் சுபாவமாகவுள்ள இந்த தேசத்திற்கு மற்ற தைலங்களைவிட நல்லெண்ணெயேநரம்புஸ்தானங்கள் நேத்ரம் இவைகளுக்கு திடத்தைக்

கொடுக்கும் காரணத்தால் பிரதான்யம் பெறுகின்றது. அப்யங்கனம் ஆரோக்கியமான வழிகளில் ஒன்று என்றும், அநுதினமும் செய்ய வேண்டுமா எப்பொழுது எப்படி செய்யவேண்டுமென்று சொல்லும் சில விதிகளுண்டு. சில பிரதேசங்களில் தினம் அப்யங்கனம் செய்யும் பழக்கமும் இருக்கின்றது. அது திரிகால ஸ்நானம் செய்யும் பழக்கம் போல் தேசாசாரத்தை அநுசரித்த ஓர் ஆரோக்கிய வழி என்று சொல்லலாம்.

தினம் அப்யங்கனமே செயயின் சருமம் மினுமினுக்கும். சோம்பல் விலகும்—தனியான ஐயமும் தோஷம் அருசிதந்த நோயொழியும். மெய்யும் மிகப் புஷ்டியிடும். இது அதி சௌக்கிய விதியும் எப்பொழுதும் செய்து கொள்வது சாத்யமாகாத வகையுமேயாகும்

ஆனல் வாரம்இருமுறை ஸ்நானம் செய்வது நோயணுகாமல் காப்பாற்றும் வகையாகும். அதிலும் சாதாரணமாய் அப்யங்கன விதிகளிலும் நோயணுகா விதிகளிலும் நமது தேசாசாரத்துக்கு ஒத்தவகையில் என்ன என்ன ஸ்நானம் எவ்வெப்பொழுது செய்ய வேண்டுமென்ற விதியும் அடியிற்கண்டவாறு "எள்ளி நெய்யும் முக்கூட்டுட நெய்யும் ஆநெய்யும் விள்ளு தைலாதிகள் வீறநெய்யும் — உள்ளபடி வாரந் தனக்கிருநாள் வைத்தாடி நோய்கள் திசாரந்தனக்கிடமற்காண்"

அப்யங்கனம் என்பது தைலாதிகளால் செய்வதாலும் உஷ்ண வீர்யமும் சீதவீர்யமுமான சுபாவம். எல்லா எண்ணெய் நெய் முதலியவைகளின் குணமாகையாலும் வாதஹரமான ஒரு சிகிச்சை என்ற பாவத்தாலும் அப்யங்கனம் வெந்நீரில்தான் செய்யப்படவேண்டும். தைலங்களைத் தடவியபின்பு அவரவர்களின் பழக்க வழக்கங்களுக்குத்தகுந்ததான வகையில் சீயக்காய் தூள் அரப்பு முதலியவைகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் தினம் அப்யங்கனம் செய்து கொள்வதால் நரம்புஸ்தானங்கள் உற்சாகம் அசதி இவைகளுக்கு ஒற்றுமைப்படுவதால் மலச்சிக்கல் என்னும் வியாதியினின்றும் விடுபடுவார்கள். இது எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் வழக்கமுள்ள ஒவ்வொருவரும் எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் தினமே அநுபவிக்கக் கூடிய ஒரு உண்மையாகும்.

மற்றும் சீதோஷ்ணமும் ஆரோக்கிய விதிகளும் என்ற உண்மைகள் சம்பந்தமாக நமது பெரியோர்கள் ஆசரயித்துவந்த ஸித்தாந்தங்களின் உண்மை தோற்றங்களைப் பின்னும் எழுதுவோம்:—

நகைச் சோலை

இல்லாத வருத்தம்

வேலைக்காரன்:— சாமி! யாரோ ஒத்தர் உங்களை அடிப்பதற்கு நாலு ஆளை அழைத்துக்கொண்டு இங்கு வந்தார்.

எஜமானர்:— நீ அப்பொழுது என்ன செய்தாய்?

வேலைக்காரன்:— நீங்கள் அந்த சமயத்தில் இங்கு இல்லையே என்று மிகவும் வருத்தப்பட்டேன்.

—"மணி"

காரணம்

உபாத்தியாயர்:— சீனு! இந்த வகுப்பிலுள்ள பையன்களுக்குள் எனக்கு யார் மேல் அதிகப்பிரியம்? சொல்லு பார்ப்போம்.

சீனு: கிட்டுமேல்தான் ஸார்!

உபா:— என்னடா! சுத்த மண்டு வைப்போய் எனக்குப்பிரியமானவன் என்கிறாயே?

சீனு :— அவனைத்தானே ஸார் நீங்கள் மூன்று வருஷமாய் விடாமல் உங்கள் வகுப்பிலேயே வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்!

—:............

(விலாசம் தெரிவிக்கவும்)

பெப்பே !

உபாத்தியாயர் :— ஏண்டா சுப்பு! உன்னை இங்கிலீஷ் பாடத்தைப் பார்த்துப் பத்துத் தடவை எழுதிக் கொண்டு வரச்சொன்னேனே, ஏன் மூன்றுதடவை மட்டும் எழுதிக் கொண்டு வந்திருக்கிறாய்?

பையன்:-தயக்கத்துடன் எனக்குக் கணக்கும் வராது ஸார்.

— ஆர். வி. ராமன்.

* * *

திடவைராக்கியம்

ராமன்:— கிருஷ்ணா ! காப்பி சாப்பிடுவதில்லை என்ற திடவைராக்கியம் செய்துகொள்ள முடியாதா?

கிருஷ்ணன்:-முடியும்; ஆனால் காலையில் ஒரு கப்காபி சாப்பிட்ட பிறகு தான் மனதை எந்தக் காரியத்திற்கும் திடம்செய்து கொள்ள முடிகிறது.

—எம். ரங்கநாதன்.

* * *

நல்ல பதில்

உபாத்தியாயர் :— தாவரவர்க்கம் என்று எதற்குபெயர்?

பையன்:— குரங்கிற்குத் தாவரவர்க்கம் என்று பெயர்.

—எம். எஸ். தேவன்.

*

நாஞ [illegible] சவிடா?

தந்தை;—பெரியவர்கள் என்னவைதாலும் காதில் போட்டுக் கொள்ளக் கூடாது. கிட்டுவைப்பார் அவன் அப்பா வைவதையெல்லாம் காதில் போட்டுக்கிறானா?

பிள்ளை:-அவாத்து கிட்டு செவிடு அப்பா !

—ராமகிருஷ்ணன்.

அணிலின் வண்டி

ராமன்

*

முன் ஒருகாலத்தில் பட்சிகளும், மிருகங்களும் சிநேகமாயிருந்தபோது அணில் ஒரு வண்டி கொண்டுவந்தது. அந்த வண்டியை அணிலின் தகப்பனார் அதன் ஆண்டு நிறைவு விழாவில் பரிசாக வாங்கிக் கொடுத்திருந்தார். அணிலுக்கு வெகுநாளாக ஒரு ஆசை இருந்து வந்தது. அது என்னவெனில் பூனையின் தயவை சம்பாதித்து விட்டால் அந்தப் பூனையை வண்டியில் பூட்டி ஓட்டலாம் என்பதே. இதையும் ஒருநாள் அணில் பூனையிடம் கேட்டது. அதுசம்மதிக்கவே நல்ல நாள் பார்த்து வண்டியை குளத்தில்சமூவி மஞ்சள் குங்குமம் தடவி சாம்பிராணிப் புகைபோட்டு பின்பு பூனையைவண்டியில்பூட்டி ஆந்தை நீர்எலி இரண்டையும் ஏற்றிக்கொண்டு வண்டியை ஓட்டிற்று வண்டிவெகுவேகமாய் ஓடிற்று. அதனல் ஆந்தை மிகவும் பயந்தது. பயத்தினுல் கண்கள் விரிந்து பெரிதாகிவிட்டன. நீர்எலிக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை அது அதிகம் சிரித்ததால் அதன் கண்கள் மூடிவிட்டன. அதிலிருந்துதான் ஆந்தையின் கண் பெரிதாகவும், நீர் எலியின்கண் சிறிதாகவும்போயிற்று.

[உரிமை கதாசிரியருடையது]

பூர்வ கதை] [எல். ஆர். வி.

[சிறுவயதில் தந்தையை இழந்த சங்கரன் ஜெமீனும் கடலில் மூழ்கிவிடத் தாயுடன் தனது மாமனும், மாமனாருமான பீமராவ் ஆதரவில் சென்னையில் வசித்து வருகிறான். அங்கே தாயும் மகனும் எல்லை மீறிய அலட்சியத்துடன் நடத்தப்படுகிறார்கள். பி. ஏ. பட்டதாரியான சங்கரன் வேலை கிடைக்காமல் மனமுடைந்திருக்கும் சமயம் வீட்டில் நடந்த சிறு கலகம் பெரிதாக உருமாற அதன் பயனாய் தாயும் மகனும் வீட்டை விட்டு வெளியேற நேருகிறது. பீமனின் மூத்த குமாரனாகிய பார்த்தசாரதி அவர்களைப் பரிவுடன் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான்.

கல்கத்தாவில் வசித்துவரும் ரிடையர்ட் ஜட்ஜ் அனந்த கிருஷ்ண அய்யர் தனது இளையபுத்திரி சங்கரிக்கு தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீபாதிமங்கலத்தில் வசிக்கும் ரிடையர்ட் தாசில்தார் ஸ்வயம்புவையர் பிள்ளையை வரனாக நிச்சயிக்கிறார். வரதட்சிணையில் ஒரு பகுதியை முன்பணம் கொடுத்துவிட்டுப் பெண் பார்க்க மாப்பிள்ளையையும் சம்பந்திகளையும் அழைத்துவிட்டுக் கல்கத்தா திரும்புகிறார். பர்வதத்தம்மாளும், நாராயணசாமியும் பெண் பார்க்க வருகிறார்கள். நாராயணசாமியின் நடையுடை குணம் முதலியவைகளைக்கண்டு சங்கரியும், அனந்தகிருஷ்ணையரும் மனம் வருந்துகிறார்கள். முடிவில் கொள்ளிடக் கரையிலுள்ள பனையம்பட்டியில் கல்யாணத்தை நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன.]

பதிமூன்றாவது அத்தியாயம்

சௌபாக்யவதி ரமா

கையில் பிடித்த பிடில் வாத்தியாரைப் பார்த்த கண்கள். பந்தாடும் கிரௌண்டில் லபித்த உள்ளம். கள்ளம் கபட மற்ற— பிடிவாதம், அலட்சியம், கர்வம் முதலியவை நிறைந்த அந்த உள்ளத்தின் சாயலைப் பரிபூர்ணமாக எடுத்துக்காட்டும் சுந்தரவதனம். அந்தி வேளையில் துள்ளி விளையாடும் கெண்டைக் குஞ்சுகளென அஞ்சனம் தீட்டிய அழகிய விழிகள். மந்த மாருதத்தில் அந்தரத்திலாடும் சுகந்தம் நிறைந்த முல்லைக்கொடி போன்ற இடை. இத்தனை வர்ணனைகளுக்கும் மேம்பட்ட தோற்றத்தோடு கலைவாணி போலமர்ந்து பாட்டுச் சொல்லிக் கொள்ளுகிறாள் நமது ரமா. அவளது இதய நிலை அமைதியிலில்லை. எங்கோ ஞாபகமும் எவ்விடமோ சிந்தனையுமாகக் கடனைக் கழிக்கும் பாவனையில் வாத்தியார் முன் அமர்ந்திருந்த அவள் கதலித்தண்டு போன்ற தனது மெல்லிய கரத்தால் பிடிலை இசைத்தாள். வாத்தியார் உத்தரவுப்படி 'கல்யாணி' ராகத்தை ஆலாபனம்செய்தாள். சுருதிபேத மற்று வாத்தியத்துடன் பாடினாள். பாடி முடித்ததும் ஆசிரியர் முகத்தை நோக்கினாள். அவர் ஒரு முறை கனைத்தார். பிறகு ஒரு கீர்த்தனையைப் பாட ஆரம்பித்தார். ரமாவின் முகம் கடுப்புற்றது.

அன்று புதுக்கீர்த்தனை ஆரம்பம். எப்போதும் புதுக்கீர்த்தனையை ஆரம்பிக்கும்போது ஒரு முறை பூராப்பாட்டையும் பாடி முடித்துப் பிறகுதான் சொல்லிக் கொடுப்பது வழக்கம். அந்த முறைப்படி பாட ஆரம்பித்ததும் ரமாவின் முகம் மாறுடவே வாத்தியார் அதைக்கண்டு புன்னகை புரிந்தார். அநுபல்லவியை எடுத்ததும் அவளது முகாரவிந்தம் பரம விகார மடைந்தது. சரணத்தைக் கேட்கவே அவளிஷ்டப் படவில்லை யென்பது நன்கு தெரிந்தது. அதற்காக வாத்தியார் பாட்டை நிறுத்தினாரா?

பாட்டு

ராகம் : கல்யாணி

தாளம்: ஆதி

பல்லவி

பதி மேல் தெய்வம் பதியே—
பாவையர் அறிவார் ததியே
துதி செய்யார்க்கில்லை கதியே(ப)

அநுபல்லவி

மதிமோசம் நாகரீம்
மனம் கெடுமதில் யார்க்கும்
சதியின்விதியே பதி
சேவையாம் சன்மார்க்கம் (ப)

சரணம்

பரந்த உலகம் தன்னில்
நிரந்தர மற்ற விஷ
போதனையிலே மனம்
புகுந்து மேன்மேலும்
வரும் விதி யறியாது
வஞ்ச வலையில் சிக்கி
பெரும் வினைக்குள்ளாகி
சிறுமை யுறாமலே
பரகதிதரும் பதி துதியே
சுகவாரிதி
'வரகவிசக்தி தாஸன்'
தமிழ் கவி தரும் நீதி (ப)

பாட்டு முடிந்ததும் குப்பென்று சிரித்துவிட்டார் பாடகர். அதற்குக் காரணம் ரமாவின் முக சேஷ்டைகள்தான். அவர் கொஞ்சம் தமாஷ் பேர்வழி. அமர்த்தலாகக் கேட்டார்:

"என்ன ரமா, உன் மூஞ்சி ஒரு மாதிரியாயிருக்கே என்?"

வெடுக்கென்று பதிலளித்தாள் ரமா.

"ஒரு மாதிரியும் இல்லே; பல மாதிரியும் இல்லே. இதென்ன பாட்டு?"

"ஏன்? நல்ல பாட்டுத்தான். உனக்குப் பிடிக்கவில்லையா?"

"ஆமாம். நல்ல கீர்த்தனையாகச் சொல்லிக் கொடுங்கள் என்று முந்தாநாள் அம்மா சொன்னதின் பலனோ இது? ரொம்ப அழகு!"

"அட அசடே! இதுக்கேன் இத்தனை கோபம்? பிடிக்காவிட்டால் வேண்டாமே! வேறு உருப்படி சொல்லிக்கொண்டால் போகிறது.... ஆனால்........ இதை விட நல்ல பாட்டு உலகத்தில் கிடையாது. பெண்களுக்கு அவசியமான நீதிகள் இதில் நிறைந்திருக்கு. இத்தனை நாள் குழந்தை வர வர பெரியவளாகிக்கொண்டு வருகிறாய் நீ தெரிந்து கொள்ளவேண்டிய முக்ய விஷயங்களடங்கினஉருப்படியாயிருக்கே என்று உனக்காக சிரமப்பட்டு ஒருவரிடமிருந்து இதை எழுதி வாங்கினேன்—"

இதையெல்லாம் ரமாவின் உள்ளம் கிரகிக்கிறதா இல்லையா என்பதே தெரியவில்லை. அவள் எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய மெய்மறந்த நிலைமையை மாற்ற சற்றுத் தமாஷாகக் கூறினார் வாத்தியார்.

"இதோ பார் ரமா, நாளை முதல் நீ சங்கரனை—"

சட்டென்று திரும்பிப்பார்த்தாள் ரமா. அவள் கண்கள் கோபத்தணலைக் கக்கின. உதட்டைக் கடித்துக் கொண்டாள். பெருமூச்செறிந்தாள். மார்பகம் விம்மிற்று. இதையெல்லாம் கண்டு அந்த வாத்தியார் பயந்தே போய்விட்டார்.

சங்கரனும், சக்குபாயும் பீமராவின் வீட்டை விட்டு வெளியேறிவிட்ட சமாசாரம் பாட்டு வாத்தியாருக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் எப்போதும் போல் இன்றும் தமாஷாகப்

பேசியிருக்க மாட்டார். சங்கரன் சென்றுவிட்ட நாள்முதல் தலையிலிருந்த பெரியசுமை இறக்கப்பட்டது போலவும், காலைச்சுற்றிக்கொண்டிருந்த கொடிய விஷஸர்ப்பம் தானாகவே ஓடி மறைந்து விட்டதுபோலவும் எண்ணி எண்ணி சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிருள் ரமா. அப்படிப்பட்டவளுக்கு இப்பாட்டும் பரிகாச வார்த்தைகளும் ஏற்குமா? ஆனல் வாத்தியார்பேரிலும் பிசகில்லை. இப்படியெல்லாம் ரமாவைப் பரிகசிக்கும் உரிமையுடன் அந்த வீட்டில் பழகி வந்தாரவர்.

ரமாவின் எட்டாவது வயதிலிருந்தே இந்த வாத்தியார்தான் அவளுக்குப் பாட்டுச் சொல்லிக்கொடுத்து வருகிறுர். அடிக்கடி இப்படியெல்லாம் ஏதாவது தமாஷாகப் பேசுவதும், அதற்கவள் புன்முறுவல் பூப்பதும், சில சமயங்களில் கோபித்துக் கொள்வதும் வழக்கந்தான். ஆனல்............ இன்று வாத்தியாரின் பாட்டும் பரிகாசமும் அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. எரிச்சல் எரிச்சலாய் வந்தது. செய்வகை யறியாது தவித்துப் பெருமூச் செறிந்தாள் அடிக்கடி. கண்கள் கடிகாரத்தை நோக்கின. ஐந்தடிக்கச் சிலநிமிஷங்கள் பாக்கியிருந்தன. வாசலில் ஸைக்கிள் வந்து நிற்கும் சப்தம். அடுத்த நிமிஷம் 'ரமா!' என்றழைத்துக் கொண்டே அறைக்குள் வந்தாள் பள்ளித்தோழி பத்மாவதி.

"இன்று கடற்கரையில் மிஸ்ஸஸ் லக்ஷ்மணன் லெக்சராச்சே, நீ வரவில்லை ?"

அவ்வளவுதான். கையிலிருந்த பிடிலை மெதுவாகக் கீழே வைத்துவிட்டு எழுந்து நின்றுள் ரமா. வாத்தியாரைப் பார்த்துக் கொண்டே பின் நடையாக நடந்து அறை வாசற்படியை அணுகினள்.

"நாளைக்கு ஆகட்டும் ஸார் !"

இப்படிக் கூறிவிட்டுக் குதித்தோடிய ரமா ஸைக்கிளுடன் தெருவையடைந்தாள். சற்று நேரத்தில் ஸைக்கிள்கள் கடற்கரையை நோக்கிப் பறந்தன. அவைகளின்மீது அமர்ந்து பத்மாவும், ரமாவும் தம்மை மறந்து சிரித்து விளையாடிக் கொண்டு சென்றனர்.

ஸ்ரீமதி லக்ஷ்மணன் பிரசங்கம் எங்கே நடந்தாலும் கூட்டம் ஏராளமாகத்தானிருக்கும். அன்றும் அப்படியேதானிருந்தது. ரமா, பத்மா இருவரும் ஒரு பக்கமாக ஸைக்கிளை வைத்துக் கொண்டு நின்றிருந்தனர். பத்மா நாற்புறமும் சுற்றி நோக்கிக் கொண்டும் அங்கு தென்படும் இதர தோழிகளுடன் அளவளாவிப் பேசிக்கொண்டுமிருந்தாள். ஆனல் ரமாவோ பூமியை நோக்கியவண்ணம் அசைவற்று நின்றிருந்தாள். அந்த மணற்பரப்பின்மீது வாத்தியார் சொன்ன பாட்டு எழுதப்பட்டிருப்பதாக அவள் கண்களுக்குத் தோற்றிற்று. ஜனங்களின் ஆரவாரமும், கடலலைகளின்

ஓசையும், அப்பாட்டையே அவள்காதுகளில் இசைத்தன. பிரமை பிடித்தவள்போல் நின்றிருந்தவள் கும்பலில் ஏற்பட்ட பரபரப்பின் மூலம் லக்ஷ்மணன் வருகையை அறிந்தாள். பத்மாவையும் அழைத்துக் கொண்டு பிரசங்கியின் சமீபம் செல்ல ஆரம்பித்தாள்.

பிரசங்கி மேடைமீதேறினதும் ஜனங்களின் சந்தோஷமான வரவேற்பை அங்கீகரித்துத் தன்து வந்தனத்தையும் தெரிவித்துவிட்டுத் தான் அன்று பேச முன் வந்திருக்கும் '**இல்லற வாழ்க்கை**' என்கிற விஷயத்தைப் பீடிகையுடன் ஆரம்பித்ததும் எங்கும் நிசப்தம் நிலவிற்று. நேரம் செல்லச்செல்ல உணர்ச்சியுடனும் உருக்கத்துடனும் பேசிக்கொண்டேபோன பிரசங்கியின் வாக் சாதுர்யத்தில் கட்டுண்ட அனைவரும் பதுமைகள்போல் இருந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

"............பெண்களில் சிலர் கல்யாணமே செய்து கொள்ளாமலிருத்தல் நலம் எனக் கருதுகின்றனர். கல்யாணமாகிச் சிலநாட்கள் இல்லறம் நடத்திய பிறகு வாழ்க்கை மாறுதலை—விவாஹ ரத்து செய்து கொண்டு தனிமையாக வாழ்வதை விரும்புகின்றனர் சிலர். இதனலெல்லாம் அபார நன்மையை அடைந்துவிடலாம் என்று எதிர்பார்ப்பதைவிட அதிதமான கஷ்டங்களுக்குத்தான் உள்ளாக வேண்டும் என்பதை நிச்சயமாகத்தீர்மானிக்கப் பல ஆதாரங்களிருக்கின்றன. பொதுவாக ஸ்த்ரீகள் ஆடவரின் உறவின்றிக் காலந்தள்ளுதல் மிக மிகக் கடினமான காரியம் என்பது என் அபிப்பிராயம். ஆகவே கல்யாணம் செய்துகொள்ளாமலிருந்தோ, அல்லது இல்லறத்திலிருந்து விடுதலை பெற்றுத் தனிமையிலிருந்து கொண்டோ மாயப் பிரபஞ்சத்தின் மகிமையின் வயப்பட்டு நெறி தவறி தர்மம், மானம், கற்பு, உடல் முதலியவைகளைப் பாழ்படுத்திக் கொள்வதைவிட இல்லறமே நல்லறம். விவாஹமே வேண்டாமென்ற தீவிர வைராக்கியத்திலீடுபட்டிருக்கும் பெண்களின் எதிர்கால லாப நஷ்டம் ஒரு புறமிருக்கட்டும்; அப்படியுமில்லாமல் இப்படியுமில்லாமல் இரண்டுங் கெட்ட தன்மையில் "விவாஹ ரத்து" என்னும் கொடிய பைசாசத்தின் வசமாகிச் சீர்குலைய எண்ணுவோரைக்குறித்தே நானின்று முக்கியமாகப் பேச முன் வந்தது. சதிபதிகள் தத்தம் கடமைகளை நன்குணர்ந்து நடந்தால் சுதந்திரம் முதலியவை எங்கே ஓடிப் போய்விடும்? 'பெண் சுதந்திரம், பெண் சுதந்திரம்!' என்று உற்சாகத்துடன் கோஷிப்பதும் அத்துறையைப் பற்றிச் சிந்திப்பதும், அநுஷ்டானத்தில் கொண்டுவர முயற்சிப்பதும் ஆரம்பத்தில் ஒரு நூதன சக்தியைத் தருவது போலத்தான் இருக்கும். நாளடைவில் 'பெண்களின் தனி வாழ்க்கை' பாழாவது நிச்சயம்................"

பிரசங்கத்தின் ஆரம்பத்திலேயே ரமாவின் உள்ளம் குழப்பமடையத் தொடங்கிவிட்டது. மேலும் மேலும் லக்ஷ்மணன் கூறிக்கொண்டே போகும் அழுத்தந் திருத்தமான வார்த்தைகளும், உபமான உபமேயங்களும் அவளை என்னவோ செய்தன.

" இதென்ன கஷ்டம்! இன்று ஒருநாளுமில்லாத் திருநாளாக இருக்கிறதே! அங்கேயானால் பாட்டுவாத்தியார் 'பதிமேல் தெய்வம் பதியே' என்றார். இங்கேயானால் பிரசங்கி இப்படிக் கூறுகிருள். இதெல்லாம் என்ன கூற்று!" என்று சிந்திக்கத் தொடங்கினதும் அவள் தலை கிருகிருக்க ஆரம்பித்தது. அதற்குமேல் அங்கிருக்க மனம் இடந்தரவில்லை; முடியவுமில்லை. "வீட்டுக்கு வருகிறாயா பத்மா!" என்றாள். "பிரசங்கம் முடியட்டுமே" என்றாளவள். "நான் போகிறேன்" என்று கூறிப் புறப்பட்டுவிட்டாள் ரமா.

பதினான்காவது அத்தியாயம்

மனக் குழப்பம்

ஆயாசத்துடன் வீட்டையடைந்த ரமா ப்யூனிடம் ஸைக்கிளைக் கொடுத்துவிட்டு நேரே மாடிக்குச் சென்றாள். அங்கிருந்த சோபாவில் பொத்தென்று விழுந்தாள். உடலெங்கும் வியர்வை. அதைக் துடைக்க வேண்டும் என்ற நினைவுகூட இல்லை. நன்கு குழப்பப்பட்ட சிறு குட்டைபோல் கலங்கிக் கிடந்தது உள்ளம். அவளுடைய ஆயுட்காலத்தில் சஞ்சலத்தை யநுபவிப்பது இதுதான் முதல் தடவையாகையால் செல்வச் சிறுமியாகிய அவளால் இந்த நிலைமையைச் சகிக்க முடியவில்லை. தன் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினாள்.

'விவாஹம் ஆய்விட்டது' என்று பிறர் சொல்லக் கேள்வியே தவிர ஸ்வயமாக அதைப் பற்றி ஒன்றுமே அறியாதவள் ரமா. யாராவது பேச்சின்நடுவில் "உனக்குக் கல்யாணம் நடந்த போது........" என்று சொன்னால் அவளுக்குப் பிரமாதக் கோபம் வந்துவிடும். கழுத்திலுள்ள மாங்கல்யம் சாட்சி சொன்னாலும் அவளதைச்சட்டைசெய்யவில்லை. வினைத் தெரிந்த நாள் முதல் அன்றுவரை அவள் நினைத்திருந்தது வேறு. "நாமும் ஆடவர்களைப் போல் நிரம்பப் படித்து அரிய பெரிய உத்தியோகங்களை வகிக்கவேண்டும், ஒருவரும் நம்மை ஒரு காரியத்திற்காகவும் கட்டுப்படுத்தக்

கூடாது, சுயேச்சையாக இருக்கவேண்டும்.........." இது போன்ற எண்ணங்கள் அவள் உள்ளத்தில் தினே தினே அபி விர்த்தியடைந்துகொண்டே வந்தன. புது வாழ்க்கையில் மிதக்கும் பீமராவும் தன் குமாரி விஷயத்தில் இத்தகைய எண்ணங்களையேதான் கொண்டிருந்தான். ஆனல் ரமாவின் கலியாணம் இதற்கொரு முட்டுக் கட்டையாக இருந்தது.

சாந்தாபுரம் கடனில் மூழ்கிச் சங்கரனும் சக்குபாயும் இவர்கள் வீட்டோடு வந்த சில தினங்களிலேயே அவர்களிடம் இவர்களுக்கு வெறுப் பேற்பட வாரம்பித்தது. முதன் முதலில் சக்குபாயைக்கண்டு அசூயை கொள்ளலானுள் ரமாவின் தாய் ருக்மணி. அதே சார்பாக பீமராவும் அவளை வெறுக்கத் தொடங்கினன். தங்களால் வெறுக்கப்படும் சக்குபாயின் சொற்படி சங்கரன் நடந்து கொள்வதும், அவ்விருவரின் கர்ணுடகப் போக்கும் சங்கரனிடம் ஒருவித அலக்ஷ்யபுத்தியையும் துவேஷத்தன்மையையும் உண்டுபண்ணிற்று. பெரியோரே இப்படி யிருக்கையில் குழந்தையான ரமாவைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா? 'தாயைப்போல் சேயும் நூலிற்கேற்ப சீலையும்' என்றபடி இவ்விஷயத்தில் பெற்ருேருக்கு மேல் பல படிகள் உயரே செல்லத் தொடங்கினுள் ரமா.

ஒருநாள் சக்குபாய் ரமாவைத் தனிமையிலழைத்து ஏற்கனவே சங்கரனின் தந்தை ஜமீன்தாராக விருந்ததையும், அவர்மூலம் பீமராவ் முன்னுக்கு வந்ததையும், சங்கரனுக்கும் அவளுக்கும் விவாஹம் நடந்ததையும் சவிஸ்தாரமாக எடுத்துக் கூறி, சங்கரனின் நற்குணங்களையும், அவனிடமும் தன்னிடமும் பீமராவ், ருக்மனி, மணி, முதலியோர் காரணமின்றி கொண்டிருக்கும் துவேஷத்தையும் வியக்தமாக எடுத்துக் காட்டி, யார் எப்படி யிருப்பினும் ரமா அவ்விதமெல்லாமிருப்பது தகாதென்றும், இது வரை போனது போக இனியாவது ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும் என்றும் மிகவும் உருக்கத்துடனும் அன்புடனும் உபதேசித்தாள். அப்போது ரமாவின் வயது 11. ஆகவே தலையாட்டி பொம்மை போல் அனைத்திற்கும் மௌனமாகத் தலையை அசைத்துக் கொண்டிருந்த குழந்தை ரமா, உடனே தன் பெற்ருேரிடம் வந்து அத்தை சொன்ன விஷயங்கள் பூராவையும் ஒன்றுவிடாமல் ஒப்பித்துவிட்டாள். அவ்வளவுதான்! கேட்க வேண்டுமா? அதுவரை மறைவிடமாகத் தூஷித்துக் கொண்டிருந்தவர்கள் அதிலிருந்து நேரில் திட்டவாரம்பித்துவிட்டனர். ரமாவையும் இனி அத்தையுடன் பேசவேண்டாமென்றும் அவளை லக்ஷ்யம் செய்ய வேண்டாமென்றும் சொல்லித் திட்டம் செய்தனர். ரமாவுக்குப் பிடித்திருந்த குளிரும் அடியோடு விட்டு விட்டது!

சங்கரனே இவையொன்றையும் காதிற்போட்டுக் கொள்வதேயில்லை. அவன் போக்கே தனி. ஆதியில் தனக்கு ஜமீன் இருந்ததையும் தற்போது பரம தாரித்திரியத்தில் உழல்வதையும் நினைத்து அவன் ஏங்குவதில்லை. ஸர்வ லக்ஷணமும் பொருந்திய ரமா தனக்கு மனைவியாக ஏற்பட்டதை நினைத்து—கலியாண காலத்தில்—அவன் சந்தோஷிக்கவில்லை. தற்போது அதே ரமா தன்னை உதாசீனம் செய்வதை நினைத்து அவன் க்லேசம் கொள்ளவுமில்லை. அதுவொரு காலம், இது ஒருகாலம் இன்னம் ஒரு காலம் இருக்கிறது என்று நினைத்து அனைத்தையும் ஒரே விதமாகப் பாவித்து அநுபவித்து வந்தான். யாரிடமும் அதிகமாகப் பேசுவது கிடையாது. யாரேனும் எதேனும் கேட்டால் கேட்ட கேள்விக்கு மட்டும் பதிலளிப்பான். அவன் ஆண் பிள்ளை. சிறுவயதினனாக விருந்தாலும் இயற்கையாகவுள்ள நற்குணம், சிறந்த படிப்பாலும், நற் சகவாசத்தாலும் அதிகரிக்கவே அவன் அம்மாதிரியிருந்து வந்தான். ஆனால் சக்குபாயால் அப்படியிருக்கமுடியவில்லை. அவளும் நல்ல அறிவாளிதான். ஆயினும் ஸ்திரீகட்கு இயற்கையாக உள்ள குணங்கள் அவளைமட்டும் விட்டுவிடுமா? இறந்த காலத்தை நினைத்து நினைத்து பெருமூச்செறிவதும் நிகழ்காலத்தின் ஸகிக்கக்கூடாத சம்பவங்களைக் கண்டு மனமாழ்குவதும் எதிர்காலம்—சங்கரனுடையது—எவ்விதமாகுமோ வென்றெண்ணி எண்ணி ஏங்குவதுமாக இருந்தாள். ஆனால் காலம் மட்டும் எல்லோருக்கும் ஒருபோலவே சென்று கொண்டிருந்தது.

பீமனின் இரண்டாவது பிள்ளை மணி எல்லா விஷயத்திலும் அனேகமாகத் தந்தையை போலவேதான். எப்போதும் எளியாரைக்கண்டால் அவனுக்குப் பிடிக்காது. உலகத்தில் இருக்கும் ஏழைமக்கள் எல்லாம் ஒரு வேடிக்கையான ஜந்துவென அவன் எண்ணிக்கொண்டிருந்தான்—எண்ணி வருகிறான். பள்ளிப் பையன்களில் யாரேனும் ஒரு ஏழைச் சிறுவனை நாள் தவறாது துன்புறுத்தி அவன் கஷ்டப்படுவதைக்கண்டு ஆனந்திப்பான். அப்படிப்பட்ட அதி அற்புத குணம் வாய்ந்த மணிக்குச் சங்கரனைக் கண்டாற் பிடிக்குமோ! அதிலும் அற்பன் சங்கரன்—தனதாருயிர் சகோதரி ரமாவுக்குப் புருஷன் என்றால் மணியாலதை எப்படித்தான் சகிக்கக்கூடும்? ஒவ்வொரு நாளும் காலையிலெழும்போது சங்கரன் தொலையானா: ஒழியானா! என்றெண்ணிக்கொண்டேதான் எழுந்திருப்பான். அந்தோ என்ன கொடுமை! என்ன க்ரோதம்! மணியும், பீமனும், மற்றும் அக் குடும்பத்தினர் அனைவரும் தின்னும் சோறு, உடுக்கும் உடை, குடிக்கும் தண்ணீர் முதல் அனைத்தும் சங்கரன் பிச்சையாகவிருக்க அவன் மீதேதானே இத்துனைத்வேஷம்!

பீமனின் ஆதி நிலைமை சோற்றுக்கே தாளம். இப்பொழுது பெரிய ஸ்ரீமான். சங்கரன் அப்பொழுது மகாராஜா; இப்பொழுது பரம ஏழை. இது காலச் சக்கரத்தின் சுழலம். நாளைக்கு இதே சக்கரம் புரண்டும் சுற்றலாம். அனைவருக்கும் பழையபடி அவரவர்களின் நிலைமை கிடைக்கலாம். இந்தவாழ்வுசாசுவதமானதல்ல என்பதை அறியாது ஏனோ இந்த நொய்யரிசிகள் இப்படிக் குதிக்கின்றன. என்னவோ, சங்கரன் — சக்குபாய் பொருமைக்குக் காருண்யமூர்த்தியான கடவுள் நல்லவழி விடாமலாபோய்விடுவார்? ஆனால் அந்தக் கடவுள்தான் பக்ஷபாதம் நிறைந்து பொல்லாருக்கு நன்மையையும் நல்லாருக்குத் தீமையையும் தாராளமாக அருள்கிறாரே........!........இல்லை; இல்லை. பொல்லாருக்குப் பொருளை அளித்துப் பல துஷ்கிருத்தியங்களைப் புரியச்செய்து சோதிக்கிறார். நல்லாருக்குத்தீமையை அளித்து தெய்வ பக்தியையும் சத்கர்மாக்களையும் புரியச்செய்து சோதிக்கிறார். இரண்டும் சோதனைதான். ஆனால் தீர்ப்பு? நல்ல முடிவு? ....கேட்பானேன். நன்னெறிக்குத்தான். பொறுப்போம்.

மணிக்குச் சங்கரன்விஷயத்தில் ஏற்பட்ட அகாரணத்வேஷம் தினே தினே வளர்ந்துகொண்டே வந்தது. கொஞ்சங் கொஞ்சமாக ரமாவுக்கு உபதேசம் செய்து நாளடைவில் சங்கரன் கட்டிய திருமங்கிலியத்தை எந்த நிமிஷமும் அவனிடம் திருப்பிக்கொடுக்கக் கூடிய நிலைமைக்கு அவளைக்கொண்டு வந்துவிட்டான். பேதையிலும்பெண் பேதை—அதிலும் கள்ளங்கபடம் சற்றுமறியாத 12, வயது பாலகியாகிய—ரமாவும் 'மேரு மலையை அடுத்த காகம்' போல் மணியின் தீயவுபதேசங்களின் வயப்பட்டுத் தன்னைத்தானே தீயவழியில் கொண்டுபோய் மடுத்துக் கொள்ளத் தயாராகவிருந்தாள். அப்படிப்பட்டவளுக்குக் கடற்கரைப் ரசங்கம் காதில் ஏறுமோ?

ரமா கடற்கரை ப்ரசங்கத்தை வெறுத்து முற்றிலும் கேளாது வீட்டுக்கு வந்தாளே தவிர அவள் மனம் கொண்ட கலக்கம் சொல்ல வகையில்லாதது. அன்று மாலை பாட்டு வாத்தியார் ஒரு புதுக் கீர்த்தனை ஆரம்பித்தார். அது அவள் மனப்போக்குக்கு எதிரிடையானது. அதைச் சொல்லிக் கொள்ள இஷ்டப்படாமல் தவித்துக் கொண்டிருக்கையில் தோழி பத்மா வந்து கடற்கரைக்கு அழைத்துச் சென்றாள். சென்றவிடத்திலும் மனதிற்கு விரோதமான சொற்பொழிவு! இரண்டும் சேர்ந்து அவள் மனதைக் கொலைசெய்ய வாரம்பித்தன.

176489

(தொடரும்)

நமது புது ஏஜண்டுகள்

1. மதுரை :- எம். சின்னஸாமி, 12. ராமாயணசாவடித்தெரு.
2. திருப்பூர்:- வி. எஸ். ஆர். அண்டு கம்பெனி, 5/2 காதர்பட்தெரு.
3. ஆரணி :- எம். எஸ். சுந்தர் அண்டு கோ.
4. வேலூர்:- வி. டி. ஸ்ரீநிவாஸன், நைனியப்ப முதலியார்தெரு.
5. சேலம் :- எஸ். பட்டாபிராம் நாயுடு, ரோஸ் ஸ்டோர்ஸ், அண்டு ஜெனரல் மர்ச்சண்ட், முதல் அக்ரகாரம்.
6. பங்களூர்:- கே. வி. வெங்கட்ராமன், 7. N. 2 நம்பர் தெரு, காவல்ரி ரோட் க்ராஸ்.
7. பம்பாய்:- எஸ். பத்மனாபன், 9. கார்னர் ஹௌஸ், டெலாங்ரோடு, மாதுங்கா, பம்பாய் 19. ஜி. ஐ. பி.
8. மாயவரம் :- எஸ். பி. மணியன், பட்டமங்கலத்தெரு.
9. திருநெல்வேலி:- எஸ். முத்துக்கிருஷ்ணன், ஹிந்து பூந்துறை.
10. கொழும்பு:-வெஸ்டேர்ன் நியூஸ்ஏஜன்ஸி, 170. உல்பன்தால்தெரு.
11. பழநி :- ஆர். சுடலைமுத்து, தனியார்மடம், தெற்கு வீதி.
12. புதுவை :- லக்ஷ்மணப்ரஸாத் அண்டு கோ.
13. கோயம்புத்தூர்:- ஜி. வி. சுப்பையா, ஜனரல் நியூஸ் ஏஜன்ஸி, 40. கருப்பக்கவுண்டன்தெரு.
14. அருப்புக்கோட்டை:- ஜோதிவிலாஸ் நியூஸ் ஏஜன்ஸி.
15. திண்டிவனம்:- எஸ். ஜி. சுப்ரமண்யம், ஜெனரல் மர்ச்செண்ட், மாரியம்மன்வீதி.
16. மாஸ்கேலியா:- காப்ரீல் மிராண்டா அண்டு ஸன்ஸ்.
17. தூத்துக்குடி:- என். சங்கரன், 101. பி. கீழரதவீதி.
18. சோழவந்தான்:- கே. பி. சுப்ரமண்யய்யர்.
19. பரமக்குடி :- என். சி. சந்திரன், டோர் நம்பர் 10/152. ராஷ்ட்ரபதி தெரு.
20. உதகமண்டலம்:- எஸ். அமீர்அலி, மவுண்டன் நியூஸ் ஹால்.
21. குன்னூர் :- எ. சங்குண்ணி நம்பியார், ஹிந்துமாடர்ன் டீ ரூம், கிரேய்ஸ் ஹில் ரோடு.
22. நாகர்கோயில் :- வி. கே. ஷண்முகசுந்தரம், சிதம்பரநகர்.

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.

— விவரங்களுக்கு —

மானேஜர், மிராசுதார், மாயவரம்.

Reg. No. M. 4158. MIRASDAR

P. A. RAJU CHETTIAR & BRO
Diamond Merchants & Jewellers.
COIMBATORE
RAJA COIMBATORE
No 218 A

வனிதையர் விரும்பும்
வனப்புமிக்க ஆபரணங்கள் !



கண்கவரும் வைர
நகைகள்!

மெருகூட்டும்
அணிகலன்கள்!

P. A. ராஜா செட்டியார் & பிரதர்.,
வைர வியாபாரம், கோயமுத்தூர்.

Edited, Printed & Published by V. Ramamurthi. B. A., at the Mirasdars' Welfare Press, 29, Mahadana Street, Mayavaram.